ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.
ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	மார்ச் 1966	இதழ் 3

சட்டமன்றத்தில்
ஆரம்பக்கல்வி

"தமிழ் நாட்டு அரசாங்கத்தின் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, நாற்பத்தைந்து கோடியே முப்பது லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து ஐந்நூறு ரூபாய் ஆகும். இந்தத் தொகை மிகப் பெரியதுதான். ஆனால் நாட்டில் நடைபெறவேண்டிய எந்த வகையான முன்னேற்றத்திற்கும் கல்விதான் தலைசிறந்த அடிப்படையாகும். ஆகவே அதற்குத் தலையாய முக்கியத்துவம் உண்டு."

இந்த வார்த்தைகளை எடுத்துக் கூறியிருப்பவர், தமிழகத்தின் முதலமைச்சராகத் திகழ்வதோடு கல்வி அமைச்சராகவும் விளங்கும் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் ஆகும்.

7—3—66 அன்று தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் கல்வி மானியத்திற்கான விவாதத்திற்கு விடை அளித்துப் பேசும்போது தான் முதலமைச்சர் அவர்கள் இக் கருத்துரையை அளித்துள்ளார்.

சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின்படி, ஏப்ரல் திங்கள் முதல் நாளில் தொடங்கும் நிதி ஆண்டில், தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு ரெவின்யூ கணக்கில் கிடைக்கவிருக்கிற மொத்த வருமானம், ஏறத்தாழ 180 கோடி ரூபாய் ஆகும். இதில் 45 கோடி ரூபாய் கல்விக்காக மட்டும் செலவிடப்பட விருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் எடுத்து விளக்கியிருப்பதைப் போல மொத்த ரெவின்யூ செலவில் பொதுக் கல்விக்கான செலவு, ஏறத்தாழ 23 சத விகிதமாகிறது.

அடுத்த ஆண்டில் கல்வியின் வளர்ச்சிக்காக அரசாங்கம் என்னென்ன ஏற்பாடுகளை மேற்கொள்ள இருக்கிறது என்பது பற்றிய விவரங்களையும் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தின் முன் வைத்துள்ளார். இந்த விவரங்களின்படி, அடுத்த ஆண்டில், 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். அப் பள்ளிகளுக்காக 3750 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவர். அதுபோலவே, 11—14 வயதுத் தொகுதியைச் சேர்ந்த 2 லட்சம் சிறுவர்கள் தொடக்கப் பள்ளிக் கல்விக்கு மேற்பட்ட வகுப்புகளில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்தகைய வகுப்புகளுக்காக 6666 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவர்.

பள்ளியின் நூல் நிலையங்களை மேம்பாடு அடையச் செய்வதற்காக அடுத்த ஆண்டில் 11,000 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 4000 உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் இணை மானியங்கள் வழங்கப்படும்.

கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் மிகவும் இன்றியமையாத சாதனங்களை வாங்க ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிக்கும் ரூ. 500 வீதமும், ஒவ்வோர் உயர் ஆரம்பப் பள்ளிக்கும் ரூ. 1000 வீதமும் மானியம் வழங்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் ஆசிரியர்களுக்காக அடுத்த ஆண்டில் 750 குடியிருப்புகள் கட்டப்படும்.

1 முதல் 3வது வகுப்பு வரை படிக்கும் சிறுவர் சிறுமியர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இலவசப் புத்தகங்களும் பலகைகளும் வழங்க ரூ. 42 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களால் தரப்பட்டுள்ள இந்தப் புள்ளி விவரங்கள் யாவும், கல்வியின் வளர்ச்சியில் தமிழ்நாட்டு அரசாங்கத்

தார் கொண்டுள்ள ஆர்வத்தையும் அக்கறையையும் தெள்ளத் தெளிய விளக்குகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வியின் முன்னேற்றமே அடிப்படை. அந்தக் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆரம்பக் கல்வியின் முன்னேற்றமே அடிப்படை. இந்த இரண்டு உண்மைகளும்; நல்லறிவாளர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மைகள், நாடு நல்வாழ்வு அடைய வேண்டுமானால் அனைவரின் நெஞ்சிலும் நிறுத்தப்படவேண்டிய உண்மைகள். சிறப்பாகவும் குறிப்பாகவும் அரசாங்கத்தால் மறக்கப்படக்கூடாத உண்மைகள்.

இன்றியமையாத இந்த இரண்டு உண்மைகளையும் தமிழ் நாட்டு அரசாங்கத்தார் திட்டவட்டமாக உணர்ந்துள்ளனர் என்பதும், உணர்ந்ததற்கு ஏற்ப நடைமுறையில் செயலாற்றவும் முனைந்துள்ளனர் என்பதும், சட்டமன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள விவரங்களிலிருந்து நன்கு புலனாகிறது.

தமிழக அரசாங்கம் மட்டுமல்ல, தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் யாவருமே இந்த உண்மைகளைத் தெள்ளத் தெளிவாக அறிந்துள்ளனர் என்பது, அம் மன்றத்தில் கல்வி மானியத்தை யொட்டி நடைபெற்ற விவாதத்திலிருந்து எழில்பட விளங்குகிறது.

அந்த விவாதத்தில், ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் ஆகிய இரண்டு பக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஏராளமான அளவில் கலந்து கொண்டு பொதுவாகக் கல்வியைப் பற்றியும், சிறப்பாக ஆரம்பக் கல்வியைப் பற்றியும் உள்ள பல்வேறு சிக்கல்களை—நிலைமைகளை—கோளாறுகளை—குழப்பங்களைத் தத்தம் கோணங்களிலிருந்து அலசி ஆராய்ந்துள்ளனர்.

சட்டமன்றத்தில் உள்ள எல்லாத் தரப்பினரும் கல்வியைப் பற்றிய சிக்கல்களில் இந்த அளவு ஆர்வம் கொண்டிருப்பது, நம் உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சுகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆசிரியர்கள் பெரும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் குறைந்துவிடுகிறது என்றும், ஆகவே அப் பொறுப்பிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்கவேண்டியது இன்றியமையாதது என்றும், கல்வியின் தரம் உயர்வதில் அரசாங்கத்திற்கு உண்மையில் அக்கறை இருந்தால் இத்தகைய விடுதலையை

ஆசிரியப் பெருமக்களுக்கு உடனடியாக அளித்தாக வேண்டும் என்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியுள்ளனர்.

இவர்களுடைய கண்டனங்களுக்கு விடை அளிக்கும் முறையில் பேசிய முதலமைச்சர் அவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்களைத் தலைவர்களாகக் கொண்ட மதிய உணவுக் குழுக்களை அமைத்து அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது என்றும், இந்தத் துறையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுவார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது என்றும், அவர்கள் அப்படி நிறைவேற்றினால் ஆசிரியர்களுக்கு உள்ள தொல்லை பெரும் அளவுக்கு நீங்கிவிடும் என்றும், திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்கும் யோசனை அரசாங்கத்திற்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த விடை முழுத் திருப்தியை அளிப்பதாக இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியிருப்பதைப் போல, மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்க வேண்டியது, அவசரமாகவும் அவசியமாகவும் செய்யப்பட வேண்டிய பணியாகும்.

மதிய உணவுத் திட்டத்தின் நோக்கம் சிறந்தது—சீர்மிகுந்தது—உயர்ந்தது—உன்னதமானது. இந்த உண்மையை மறுப்பார் இல்லை.

மதிய உணவைப் பெறுவதற்காகப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து தங்கள் வீடுகளுக்கு எளிதில் சென்றுவர முடியாத அளவுக்கு வீடுகள் தொலைவாக இருக்கின்றன என்ற காரணத்திற்காகவும், ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மதிய உணவைக்கூடத் தரமுடியாத அளவுக்கு வறுமைத் தீயால் வாட்டப்படுகிறார்கள் என்ற காரணத்திற்காகவும், மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் நோக்கத்தில் எத்தகைய தவறும் இல்லை. இருக்கின்ற தவறெல்லாம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தால் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டில்தான்.

தற்போதுள்ள ஏற்பாட்டின்படி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பில் பெரும்பகுதி ஆரம்ப ஆசிரியர்கள் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது. அவர்கள்தான், பெற்றோர்களை அடிக்கடிச் சந்தித்து இதற்குத் தேவையான பண உதவியைச் சிறுகச்சிறுகப் பெறவேண்டியிருக்கிறது. அவர்கள்தான், இதற்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பல வீடுகளுக்குச் சென்று நன்கொடையாகத் திரட்டவேண்டியிருக்கிறது. அவர்கள்தான்,

நன்கொடையாகக் கிடைத்த உணவுப் பொருள்களையும் கடைகளி லிருந்து வாங்கிய உணவுப் பொருள்களையும் பக்குவமாகச் சமைக்கும் பணியிலும் சமைத்ததைப் பரிமாறும் தொண்டிலும் ஈடுபடவேண்டி யிருக்கிறது. திரட்டிய நன்கொடைகளுக்கும், பெற்ற பண்டங் களுக்கும், அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவித் தொகைக்கும், பிள்ளைகளுக்கு வழங்கிய உணவுக்கும் கணக்குப் புத்தகத்தில் பதிவு களைச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பும் ஆசிரியர்களின் தோள் களின்மீதே சுமத்தப்பட்டுள்ளது.

ஆசிரியப் பெருமக்களின் நேரமும் நினைப்பும் அறிவும் ஆற்றலும் இந்தப் பணிகளுக்கே செலவாகிவிடுமானல், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்குச் சிறந்த முறையில் கல்விப் பயிற்சியை அளிப்பதற்குத் தேவையான நேரமோ, நினைப்போ அவர்களுக்கு எப்படி ஏற்படமுடியும்? அவர்களுடைய நேரம் முழு வதும், நினைப்பு முழுவதும், அறிவு முழுவதும், ஆற்றல் முழுவதும் கல்விப் பயிற்சியை அளிப்பதிலேயே ஈடுபடுத்தப் படுவதுதான் முறை. ஆனல் மதிய உணவுப் பொறுப்புக்கள் அவர்களுடைய தோள்களைப் பிடித்து உலுக்குகிற இன்றைய சூழ்நிலையில் அப்படி ஈடுபடுத்தப்பட முடியுமா? முடியாது என்பது, வெள்ளிடைமலை யெனத் தெள்ளிதின் விளங்கும் உண்மை. இத்தகைய நிலையில் ஆசிரியர்களால் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் எப்படி உயர்ந்த தாக இருக்க முடியும்?

மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிய இந்தச் சிக்கல்கள்யாவும் தீரவேண்டுமானல், இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவை யான செலவுத் தொகை முழுவதையும் அரசாங்கமே அளிக்க முன் வரவேண்டும். இத்தொகையில் ஒரு பகுதியாவது உள்ளூர்ப் பொதுமக்களிடமிருந்து திரட்டப்படுவதுதான் முறை என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்குமானல், அப்படித் திரட்டும் பொறுப்பைப் பஞ்சாயத்துப் போர்டுகள் எனப்படும் ஊராட்சி மன்றங்களிடமே முழுமையாக ஒப்படைக்க வேண்டும். ஆசிரியர் களுக்கும் அதற்கும் எத்தகைய தொடர்பும் இருத்தலாகாது. அது போலவே உணவைத் தயாரித்து வழங்கும் பணியும் ஊராட்சி மன்றங்களின் பொறுப்பில் விடப்படவேண்டும். சுருக்கமாகக் கூற வேண்டுமானல், மதிய உணவுத் திட்டம் என்பது, அரசாங்கத் தாலும் ஊராட்சி மன்றங்களாலும் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு பணியாக இருக்கவேண்டுமே தவிர ஆசிரியர்களால் நிறைவேற்றப் படவேண்டிய ஒரு திட்டமாக இருக்கக்கூடாது.

“இந் நாளில் கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன; கல்வியைப் பரப்புவதில் அரசாங்கத்தின்

அளவுக்குமீறிய அவசரமும் வசதிகள் இருந்தாலும் இல்லா விட்டாலும் எல்லா இடங்களிலும் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மக்கள் காட்டும் ஆவலும், முதலாவது காரணம். கல்வித் துறையில் அரசாங்கத்தார் ஓயாமல் தலையிடுவது இரண்டாவது காரணம்" என்று, சென்னை தியாகராய நகர் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராகிய திருவாளர் காஞ்சி மணிமொழியார் அவர்கள், சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ள காரணங்கள் இரண்டும் மறுக்க முடியாத உண்மைகள் என்பதை யாரும் மறைக்க முடியாது. குறிப்பாகவும் சிறப்பாகவும் உயர் நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதில் அரசாங்கத்தார் அளவுக்கு மீறிய அவசரம் காட்டியுள்ளனர். எத்தனையோ இடங்களில், உயர் நிலைப் பள்ளிகள், உண்மையிலேயே தேவை என்கிற காரணத்திற்காகத் தொடங்கப்படாமல், செல்வமும் செல்வாக்கும் படைத்த சிலர் வற்புறுத்துகிறார்கள் என்கிற காரணத்திற்காகத் தொடங்கப்பட்டுள்ளன. அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையாகப் பற்பல உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்ட காரணத்தால், அவற்றில் பலவற்றிற்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லை; விளையாட்டுத் திடல்கள் இல்லை; கல்விப் பயிற்சிக் கருவிகள் இல்லை; முறையான பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை; தேவையான அளவு மாணவர்களும் இல்லை. உண்மை நிலையை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுவதானால், சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாகவே, புதிய புதிய பள்ளிகளைத் திறப்பதில் ஆட்சியாளர்கள் காட்டிய அளவு ஆர்வத்தையும் அக்கறையையும், இருக்கின்ற பள்ளிகளின் வசதிகளைப் பெருக்குவதில் காட்டவில்லை.

தேவையில்லாத நிலையிலும், அவசியமற்ற முறையிலும், கல்வித் துறை வல்லுநர்களையோ ஆசிரியப் பெருமக்களையோ கலந்து ஆலோசிக்காமல், தாங்களாக ஒரு முடிவுக்கு வந்த வகையிலும், அரசாங்கத்தார் சென்ற பதினைந்து ஆண்டுகளாகக் கல்வித் துறையில் அடிக்கடித் தலையிட்டுவந்திருக்கிறார்கள். இத்தலையீடானது, கல்வித் தரம் தாழ்ந்ததற்குரிய மிக முக்கியமான ஒரு காரணமாக விளங்குகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிற மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் அரசாங்கத்தார் கல்வியின் வளர்ச்-

சிக்காக ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டு வந்தபோதிலும், கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகள்—ஆசிரியர்கள் ஆகியோருடைய ஆலோசனையைப் பெருமலும், ஒப்புதலைக் கேளாமலும், கல்வித் துறையில் எத்தகைய மாறுதலையும் ஏற்படுத்துவதில்லை. நம்முடைய நாட்டிலும் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் நிலைமை அப்படித்தான் இருந்து வந்தது. ஆனால் சென்ற பதினைந்து ஆண்டுகளாகத்தான், கல்வித் துறையில் நெடுங்கால அனுபவம் பெற்றுள்ள பெருமக்களின் அறிவுரையையும் ஆய்வுரையையும் பெருமல், தமிழ் நாட்டு அரசாங்கத்தார் தங்கள் மனம்போன போக்கில் கல்வித்துறையில் மாறுதல்களை ஏற்படுத்தி வருகிறார்கள். இத்தகைய நிலையில் கல்வியின் தரம் குறைகிறது என்றால், அதில் வியப்பென்ன இருக்கிறது?

"ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி ஆகிய இரண்டு துறைகளுக்கும் இரண்டு தனித்தனி நெறியாளர்களை (டைரக்டர்களை) நியமிக்காமல் ஒரே நெறியாளரை நியமித்து இருப்பதால், இரண்டு துறைகளையும் அவரால் சீரான முறையில் கவனிக்க முடியவில்லை" என்று செய்யாறு தொகுதியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக உள்ள திருவாளர் புலவர் கோவிந்தன் அவர்கள் சட்டமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறை முழுவதற்கும் ஒரே டைரக்டர் இருப்பது என்கிற நிலைமை மாறி, கல்லூரிக் கல்வியைக் கவனிக்க ஒரு டைரக்டர், நடுத்தரக் கல்வி—ஆரம்பக் கல்வி ஆகிய இரண்டு துறைகளையும் கவனிக்க ஒரு டைரக்டர் என்கிற நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது. இந்த நிலைமையும் விரைவில் திருத்தி அமைக்கப்பட்டு, ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய மூன்று துறைகளுக்கும் மூன்று தனித்தனி டைரக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் முத்துறைக் கல்வியும், செம்மையான முறையிலும் சீர்பொருந்திய வகையிலும் முன்னேற முடியும் என்பதை நாம் பலமுறை எடுத்துக் காட்டியுள்ளோம். ஆம்! கல்வித் துறை டைரக்டர், ஒருவர் இருவராயினர். அதுவரையில் சரியான ஏற்பாடுதான். ஆனால் அதுமட்டும் போதாது. இருவர் மூவராக

வேண்டும். கல்வியின் தரம் உயர வேண்டுமானால், புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, மூன்று டைரக்டர்கள் நியமிக்கப்படுவது இன்றியமையாதது ஆகும்.

சட்டமன்றக் கல்வி விவாதத்தில் கலந்து கொண்ட வேறுபல உறுப்பினர்களும் அருமையான கருத்துகள் பலவற்றை அடுக்கடுக்காக வெளியிட்டுள்ளார்கள்.

"சிறந்த திறமையுள்ளவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வர வேண்டுமானால், ஆசிரியர்களுக்குப் பொருத்தமான உயர்ந்த ஊதியம் அளிக்கப்படவேண்டும்" என்று நியமன உறுப்பினர் திருமதி சுவாரெஸ் தெரிவித்துள்ளார்.

"ஒவ்வொரு கிராமத்திலும் இளம் குழந்தைகளுக்கான ஒரு நர்சரி பள்ளிக்கூடம் தொடங்கப்படவேண்டும்" என்பது திருவாளர் அன்பில் தருமலிங்கம் எம். எல். ஏ. அவர்களுடைய கருத்துரை.

பஞ்சாயத்துப் போர்டுகளின் மேற்பார்வையில் கல்வி நிர்வாகம் திருப்தி தரத்தக்க வகையில் செயல்படவில்லை என்பதும், கல்வித் துறை அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்து மன்றங்களுக்கும் இடையே போதுமான ஒத்துழைப்பு இல்லை என்பதும், திரு. சிரஞ்சீவலு நாயுடு எம். எல். ஏ. அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைகள் நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட வேண்டும் என்பது திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் எம். எல். ஏ. அவர்களின் ஆய்வுரை.

பொதுவாகக் கல்வித்துறையைப் பற்றியும் சிறப்பாக ஆரம்பக் கல்வித் துறையைப் பற்றியும் தமிழ் நாட்டுச் சட்ட மன்றத்தில் இவ்வாறாகச் சிறப்பான கவனம் செலுத்தப் பட்டிருப்பதைப் பற்றி நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அமைச்சரவையினர் மட்டுமல்ல, சட்ட மன்றத்தினரும், இன்று போலவே என்றும், கல்வியின் பல்வேறு பகுதிகளின் செம்மையான வளர்ச்சியைப் பற்றிச் சிறப்பான கவனம் செலுத்தி வருவார்களானால், தமிழ் நாட்டுக் கல்வியின் எதிர்காலம், எழிலும் ஏற்றமும் பொருந்தியதாகப் பேரொளி வீசித் திகழும் என்பதில் துளியளவும் ஐயமில்லை.

அட்டைப்பட விளக்கம்:

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்

—வே. கபிலன்

வீடும் நாடும் போற்றத்தக்க வெற்றிச் செய்தி; பாண்டியன் பாசறையில் பிறந்து, சோழ மன்னனின் மடியிலே தவழ்ந்து, சேரத்து இளவலின் கண்காணிப்பிலே வளர்ந்த தமிழன்னைக்கு ஒரு பொன்னாரம் அணிவிக்கப்பட்ட அறிக்கை! ஆம்; தமிழக அரசு தமிழன்னைக்குச் செலுத்திக் கொண்ட காணிக்கை.

—இப்படி நாம் எண்ணிப் பூரிக்கத்தக்க வகையிலே ஆலவாயழகனின் அருட்செல்வத்தைப் பெற்று அவ்வழியிலே நின்று வரும் தெ. பொ. மீ. அவர்களை மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"

என்பது நான்மறை. அம்மறைக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்துவிட்ட அரசு, தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு தொண்டாற்றி வரும் தலைவனுக்கு—முத்தமிழ்ப்பாவலனுக்கு—செந்தமிழ் நாவலனுக்கு உயரிய ஒரு பதவியை அளித்து தமிழ்த்தாயை கௌரவிக்கப்பட்டிருக்கிறது; தமிழ்த்தாயின் தவப்புதல்வனை பதவிப்பீடத்தில் அமர்த்தி தனக்கென ஒரு தனிப் புகழைத் தேடிக் கொண்டு விட்டது. இதுபோன்ற புகழை இதற்கு முன்னதாகவே மாநில அரசு பெற்றிருக்கிறது.

ஆம்; சென்னை மாநில அரசில் கல்வி அமைச்சராக அவினாசிலிங்கம் வீற்றிருந்தபோது ஏற்பட்ட புகழ்தான் அது. மாநிலக் கல்வித்துறை சிறந்த ஓர் ஆராய்ச்சி வழியில் அமைய வேண்டுமென்று அவர் விரும்பினார். தம்முடைய விருப்பத்தை சர். சி. வி. ராமன் அவர்களிடம் தெரிவித்தார். அந்த எண்ணத்தின்படி மாநிலக் கல்லூரிக்கு—தமிழ்த்துறைப் பகுதிக்கு ஒருவர் வேண்டியதாயிருந்தது. ஆம்; அந்த ஒருவராக தெ. பொ. மீ. அவர்களை எந்த விதமான எதிர்ப்புமின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் அந்தப் பதவிக்குரிய பட்டத்தை அவர் பெறாமல் இருந்ததே யாகும். பொதுவாகவே, தமிழ்த்துறையில் பட்டம் பெற்றவர் தான் தமிழ்த்துறைத் தலைவராக வரவேண்டும் என்கிற சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை மீறி நடந்தறியாத ஏ. எல். முதலியார் அவர்களே தெ. பொ. மீ. அவர்களுக்காகச் சட்டத்தைத் தளர்த்தக் கோரி, தளர்த்தவும் செய்து அப்பதவிக்குரியவராக மீனாட்சி சுந்தர

ஞரை நியமித்தார். காரணம், அன்னாரிடம் கண்ட ஆழ்ந்த தமிழ்ப்புலமைதான்! அந்தப் புலமையால் 'புலவர் பட்டம் பெற்றவர், பி. ஏ., எம். ஏ. பட்டம் பெற்றவர், எம். ஓ. எல்., எம். லிட்., பி. எச்டி. என்பன போன்ற ஆய்வுத் துறைப் பட்டங்கள் பெற்றவர் ஒருவர் இருவரல்ல......அத்துணை வளமான தமிழ்ப்புலமையைப் பெற்றிருந்த காரணத்தால்தான் சட்டத்தின் பிடியையே சற்றுத் தளர்த்தி, ஏன், மாற்றியே அமைக்கப்பட்டது. அத்துணையளவுக்குச் சிறந்த ஒரு தமிழ்க் காவலரை யார்தான் பாராட்டாமல் இருக்க முடியும்?

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில், அதாவது, 8-1-1901 ஆம் ஆண்டில், சென்னையின் ஒரு பகுதியாகிய சிந்தாதிரிப்பேட்டையில் பொன்னுசாமி கிராமணியாரின் புதல்வராகப் பிறந்தவர் தான், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. அவர்கள்.

முறையாக உயர் நிலைப் பள்ளியில் பயின்ற பின்னர் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றார். பின்னர், பெற்றவர் விழைவுக் கேற்ப சட்டத்துறைக் கென்று பயின்று வழக்கறிஞராக மாறினார்.

இப்படி, தமிழ்த் துறைக்குச் சம்பந்தமில்லாத துறையில் அவர் பட்டம் பெற்றவரானாலும் தமிழ் மொழியின் மீது அவருக்கிருந்த பக்தி அளவிடற்கரிய தொன்றாகும். இளமை முதற்கொண்டே தமிழ்த் தெய்வத்தை வணங்கி வந்தவர் அவர். வேதாந்த சங்கத்தில் தமிழ் பயன்று, தமிழுக்காகவே தம்மை உருமாற்றிக் கொண்டவர். சங்க இலக்கியங்களையும் சமய இலக்கியங்களையும் இதய பீடத்தில் அமர்த்திக் கொண்டவர். தாய்மொழி வளர்ச்சிக்காக பிற மொழிகளில் பட்டங்கள் பெற்று 'பன்மொழிப்புலவர்!' என்னும் கிரீடத்தை ஏற்படுத்திக் கொண்டவர். இப்படி, எல்லாவற்றிலும் நிகரற்று விளங்கிய தெ. பொ. மீ. அவர்களை வரவேற்காத உள்ளம் இருக்க முடியுமா? அந்த முறையிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னை மாநிலக்கல்லூரியிலும் முறையாக தமிழ் துறைத் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கி தமிழ் வளர்ச்சிக்குப் பணி புரிந்தார். அவரது பணி அரசியலிலும் கலந்து நின்ற ஒன்றாகும்.

தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிய தெ. பொ. மீ., சென்னை மாநகராட்சியில் உறுப்பினராக இருந்து பல்லாண்டுகள் தொண்டு புரிந்திருக்கிறார். 'வந்தேமாதரம்!' என்னும் சொல்லுக்கு வடிவு அமைத்த நேத்தாஜி, அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்றவுடன் சென்னை மாநகருக்கு விஜயம் செய்தார்...... அப்போது அவருக்கு மாபெரும் வரவேற்பை அளித்து கௌரவித்த பெருமை அவர் ஒருவருக்

கே உரிய ஒன்றாகும்.

அப்படிப்பட்ட அறிஞரை—பல்வேறு மொழிகளைப் பயின்று பட்டம் பெற்றதுபோல் பல்வேறு துறைகளில் தொண்டாற்றிய தலைவரை—'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அருள்வாக்குக்கு வடிவு சமைத்த வித்தகரை பல்கலைக் கழகத் துணைவேந்தராக்கியது. கண்டு நாடும் ஏடும் போற்றிப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றன.

தமக்கென வாழாமல் பிறர்க்குரியவமாக விளங்கிடும் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீ. அவர்களைக் குறித்து திரு. வி. க. மொழிந்துள்ளதை ஈண்டு எண்ணிப் பார்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்ததெனக் கொள் கிறேன்.

" தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை புலவரா, கலைஞரா, கலையா, கலைக்கழகமா? குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நால்வகை நிலம். அதற்குரிய மரம், புள், விலங்கு முதலியன உண்டு. அவ்வாறே மக்களுண்டு; அவர் தம் வழக்க வொழுக்கங்களுண்டு; பண்ணுண்டு; பிறவுமுண்டு. இவைகள் இயற்கைக் கலைகள். இவைகளினின்றும் மலர்ந்தவை காவிய ஓவியக் கலைகள். இக் கலைகளில் தோய்ந்து படிந்து திளைத்து இன்பத் தேனைப் பருகி மயங்கிக் கிடந்து, அவைகளாய் எழுந்து பண் மிழற்றும் தமிழ் வண்டுகள் சில உள்ளன. அவைகளில் ஒன்று மீனாட்சி சுந்தரம்.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைச் சிலர் பல்கலைக் கழகம் என்று கூறுவர். எனக்கு அவர் அவ்வாறு தோன்றுகிறாரில்லை. அவர் பல்கலைக் கழகத்தையும் கடந்த ஒருவர் என்பது என் உட்கிடக்கை. மீனாட்சி சுந்தரனார் காட்சி, எனக்கு குறிஞ்சியும், முல்லையும், மருதமும் நெய்தலும் சேர்ந்த ஒரு கழகமாகத் தோன்றுகிறது."

'கற்றோரைக் கற்றோரே காமுறுவர்!' என்னும் வாக்கு பொய்யானதல்ல என்பதற்கு இதைவிட வேறு சான்று எங்கிருக்க முடியும்? எப்படியோ......

தமிழக அரசு நல்ல ஒரு காரியத்தைச் செய்துவிட்டது. மொழி முதல் இடமான நான்மாடக் கூடலில் உண்டாக்கிய பல்கலைக்கழகத்துக்கு தமிழ் உணர்வையே தமதாக்கிக் கொண்டிருக்கும் திரு. தெ. பொ. மீ. அவர்களை துணைவேந்தராக்கி நல்ல பெயரை ஏற்படுத்திக் கொண்டுவிட்டது. அந்தப் பெயருக்கு ரத்ன கிரீடமாக விளங்கும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களை - கைம்மாறு கருதாமல் கடமையாற்றுவதில் நிகரற்று விளங்கும் நல்லவரை - வல்லவரை 'வாழ்க, வாழ்க' வென நாமும் வாழ்த்திச் சிறப்பிப்போமாக.

அம்மையப்பனின் திருப்பெயரைத் தாங்கிய அவர், அந்தத் திருப்பெயரோடுங்கூடிய தென் மதுரையில் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி நிற்போமாக.

செய்திச் சுருள்

பாங்கில் பணம் போட்ட குரங்கு!

பேர்த் (ஆஸ்திரேலியா) பிப் 11-நியூகாஸில் நகரிலே நேற்று ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

'ஓராங்உடான்' இனத்தைச் சேர்ந்த ஒரு சின்னஞ்சிறு வாலில்லாக் குரங்கு 'ஜம்' என்று ஒரு பாங்கில் பிரவேசித்தது.

அது சிவப்புச் சட்டையும் சாம்பல் நிறம் உள்ள அரைக் கால் சட்டையும் அணிந்திருந் தது.

விஷமம் செய்வதற்காக அது பாங்கில் பிரவேசிக்கவில்லை. அலுவலகத்தான் அது சென் றது.

'ஓராங் உடான்' கம்பீர நடை போட்டுச் சென்று 43 பவுனை பாங்கில் கொடுத்தது.

இந்தப் பணம் வனவிலங்குகள் பாதுகாப்பு நிதிக்காக வசூலிக்கப் பட்டது. இந்தப பணத்தை பாங்கில் போடுவதற்கு மேற் கூறிய 'ஓராங் உடான்' வாலில் லாக் குரங்கு வசமே கொடுத்து அனுப்பினார்கள். அது மலாயா் காட்டில் திக்கற்ற நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவே அதன் மூலம் வனவிலங்கு பாதுகாப்பு நிதிக்கு வசூலான பணத்தைப் பாங்கிற்குக் கொடுத்தனுப்பி யது பொருத்தமுடையது என்று எண்ணினர்.

1260 வகை ஒலி எழுப்பும் மின்னணுக் கருவி

லண்டன், பிப். 14—ஆர்கன் எனப்படும் இசைக் கருவியை போலிருக்கும் மின்னணுக்கருவி யொன்று 1260க்கும் மேற்பட்ட விதவிதமான ஒலிகளை எழுப்பு கிறது. இது இன்றைய திரைப் படம் எடுப்பவரின் நவீன கருவி யாய் அமைந்துள்ளது.

திரைப்பட ஒலிப்பதிவு திட் டங்களிலும் டெலிவிஷன் படங் களிலும் ஒலிப்பரப்பிலும் நேரடி யாக ஒலிகளைத் திணிப்பதற்காக "மெல்லோட்ரான்" எனப்படும் அக்கருவியானது முன்னதாகவே பதிவு செய்யப்பட்ட மின் காந் தப் பட்டைகளைப் பயன்படுத்து கிறது.

அதை ரிகார்டிங் எனப்படும் பின்னணி இசை பதிவின் போதும் ஆரம்பிக்கப்பட்ட ஒலிப்பதிவின் போதும் அல்லது நேரடியான ஒலிபரப்பின் போதும் பயன்படுத்தலாம்.

சாதாரணமான மின்னணு ஆர்கன் கருவியைப் போன்ற அளவினதாகவும் தோற்றமுள்ள தாகவும் 'மெல்லோட்ரான்' இருக்கிற ஒவ்வொரு வகையான ஒலியையும் கட்டுப் படுத்தும் பியானோ கட்டைகள் அதிகம் உள்ளன.

உலகிலேயே உயரமான மனிதர்!

ஹூரென்கோ. மார்க்விஸ், (போர்ச்சுக்கீசிய கிழக்காப்பிரிக்கா) பிப். 8—இங்கிருந்து 18 மைல் வடக்கேயுள்ள மோஞ்சாகாசே என்னும் கிராமத்தில் வாழும் ஆப்ரிக்க இளைஞன் உலகிலேயே மிக உயரமான மனிதராக இருக்கக் கூடும்.

கப்ரியேல் எஸ்டெவாவோ மொஞ்சானே என்னும் பெயர் கொண்ட அந்த 21 வயது வாலிபரின் உயரம் 7 அடி 9 அங்குலமாகும். அவர் இன்னும் வளர்ந்து வருகிறார். அவருடைய எடை 276 ராத்தலாகும்.

அவருடைய பெற்றோர்கள் சாதாரண உயரம் கொண்டவர்களே. அந்த வாலிபரும் 10 வயது வரை சாதாரண உயரம் கொண்டவராகவே இருந்து வந்தார். ஆனால் 10 வயதில் அவர் ஒரு மரத்திலிருந்து கீழே விழுந்ததற்குப் பிறகு வியக்கும் வேகத்தில் வளர ஆரம்பித்தார். 16 வயதில் அவர் 7 அடி 7 அங்குலத்துக்கு வளர்ந்து விட்டார்.

அவர் தற்போது ஹூரென்கோ மார்க்விஸ் மத்திய ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அங்கு மானிடநூல் ஆராய்ச்சியாளரும், டாக்டர்களும் அவரை போர்ச்சுகீசிய அரசாங்கசெலவில் பரிசோதித்து வருகின்றனர்.

கப்ரியேல் தமாஷாக சிரித்து பேசுபவராகவே இருக்கிறார். அவருக்கு மந்திர சக்தி இருப்பதாக எண்ணி அவருடைய இனத்தவர் அவரை 'மந்திரஜால ஏணும்புக்கூடு' என்று கூப்பிடுகின்றனர்.

கப்ரியேல் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார். ஆனால் அதனால் என் உயரத்துக்குத் தக்கபடி ஒரு பெண்ணைக் கண்டு பிடித்தாக வேண்டுமே" என்கிறார் அவர்.

பிச்சைக்காரர்கள் சொர்க்கம்!

சென்னை, மார்ச் 4—சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் அப்படியொன்றும் பரம ஏழைகளாக இல்லை என்பது சென்னை சமூக சேவை பள்ளி நடத்திய சர்வேயிலிருந்து தெரிகிறது.

பிச்சைக்காரர்களில் அநேகருக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. கஷ்டப்படாமல் வாழ்கிறார்கள். இந்தத் தொழில் அவர்களுக்குப் பிடித்து விட்டிருக்கிறது.

ஒரு நாளைக்கு ரூ. 2 முதல் ரூ. 4 வரை அவர்களுக்கு கிடைக்கிறது. ஒரு பிச்சைக்காரனுக்கு மாதம் ரூ. 120 சம்பாதிக்கும் பிள்ளை இருக்கிறான். 9வது வரை படித்துள்ள ஒரு பெண்ணும் இருக்கிறார்கள்.

அவர்களில் 36 சதவிகிதப் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். தமிழ்ப் பத்திரிகைகள் படிக்க முடியும், சிலரால் ஆங்கிலப் பத்திரிகைகளும் படிக்க முடியும்.

சிலர் பிச்சை எடுக்கும் பணத்திலிருந்து சேமித்து வைத்து சிறிய ஹோட்டல்காரர்களிட

மும், உறவினர்களிடமும் கொடுத்து வைக்கிறார்கள்.

சில பிச்சைக்காரர்களுக்கு சொந்தத்தில் வீடு உண்டு. சிலர் வாடகை வீட்டில் வசிக்கிறார்கள்.

பிழைப்பதற்கு சுலபமான வழி என்பதால் அநேகர் இதில் இறங்கியுள்ளனர்.

பிச்சைக்காரர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் ஆண்கள், ஒரு பங்கு பெண்கள், 40 சதவிகிதம் பேர் வயோதிகர்கள். அதில் 12 சதவிகிதம் பேர் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

பிச்சைக்கார விடுதியில் சுகாதார குறைவு மலிந்திருப்பதாக அவர்கள் பொதுவாக புகார் சொல்கிறார்கள்.

நகரில் 2,400 குஷ்டரோக பிச்சைக்காரர்கள் உள்ளனர். அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் போதவே போதாது.

இந்தத் தகவல்களைத் திருமதி கிளப்வலா ஜாதவ் சென்னை மேல் சபையில் பட்ஜெட் விவாதத்தின் போது தெரிவித்தார்.

விஞ்ஞானக் கல்விப் போதனை

துவக்கப்பள்ளியில் கட்டாயமாக்க வேண்டும்

அரசினர் விருப்பம் பற்றி அமைச்சர் சாக்ளா

புதுடில்லி, பிப், 25—விஞ்ஞான கல்வி போதனையை ஆரம்பப்பள்ளிகளிலும் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பது சர்க்கார் விருப்பம் என்று ராஜ்ய சபையில் கல்வி மந்திரி திரு. சக்ளா இன்று தெரிவித்தார். விஞ்ஞான கல்விபோதனை தற்போது செகண்டரி பள்ளிகளில் கட்டாயமாகும்.

அதிகக் கல்வி யோக்கியதாம்சம் உள்ள விஞ்ஞான ஆசிரியர்களைக் பெருகுவதற்காக, அவர்களுக்கு நல்ல சம்பளம் அளிப்பது பற்றியும் சர்க்கார் சிந்தித்து வருகிறது என்றார். திருமதி லஷிதாராஜகோபாலன் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் விஞ்ஞான பாட புத்தகங்களை மத்திய சர்க்கார் வெளியிட்டுள்ளது என்றும், அந்தந்த பிராந்திய மொழிகளில் வெளியிடுவதற்காக அவை ராஜ்யங்களுக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பல்வேறு இந்திய மொழிகளில் விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை மத்திய சர்க்காரே ஏன் ஏற்கக் கூடாது என்று உறுப்பினர்கள் கேட்டனர்.

கல்வி ராஜ்ய சர்க்கார் விஷயமாதலால் இந்தப் புத்தகத்தை மொழி பெயர்த்து வெளியிடலாம் என்று மத்திய சர்க்கார் நிர்ப்பந்திக்க முடியாது. மேலும் 14 பிராந்திய மொழிகள் உள்ளன. அவற்றை மொழி பெயர்ப்பதற்கான சிறந்த ஏற்பாடுகளை ராஜ்ய சர்க்கார்களிடம்தான் உள்ளது என்று திரு சாக்ளா பதிலளித்தார்.

பரிசோதனை சாலைக் கருவிகள், பள்ளிகளுக்குச் சப்ளை செய்வது பற்றியும் அவர் கூறினார்.

மரணத்திற்கு அழைப்பு மன உளைச்சல்

மாரடைப்பின் மர்மம்

(டாக்டர் ஜோனன் மாத்னர்)

இருதயத்திற்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாயில் திடீரென்று இரத்தம் உறைவதால், இருதயம் செயலற்றுப் போவதால் மட்டுமே மாரடைப்பு ஏற்படுகிறது என்று சொல்ல முடியாது. மன உளைச்சல்; பிடிக்காத வேலை செய்தல்: காதல் தோல்வியை மனதிற்குள் வைத்து உருகுதல் போன்ற அம்சங்களாலும் இருதயம் பலவீனமடைந்து நின்று விடலாம்.

ஹம்பர்க் (டாட்)—மாரடைப்பு ஏன் ஏற்படுகிறது என்பது குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து சுவையான விவரங்கள் கிடைத்துள்ளன. இருதயத்திற்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாயில் ஏதாவது ஓரிடத்தில் இரத்தம் கெட்டியாக, இரத்த ஓட்டம் தடைப்பட்டு விடுகிறது. இருதயத்திற்குத் தேவையான பிராணவாயு கிடைக்காமல் போய் விடுகிறது. எனவே இருதயம் மேற்கொண்டு செயல்படாமல் நின்றுவிடுகிறது. இரத்தக் குழாயில் எப்படி இரத்தம் கட்டிப் போகிறது என்பது குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இரத்தக் குழாயின் ஏதேனும் ஓரிடத்தில் ஒருவித பொருள் சேர்ந்து கொண்டே வருவதால், ஏதேனும் ஒரு சமயத்தில் அங்கிருந்து கிளம்பி இருதய இரத்தக் குழாய் வரைசென்று அங்கு நின்று விடுவதால் இரத்தஓட்டம் தடைப்படுகிறது என்று கருதப்பட்டு வந்தது.

சமீபத்தில் பேராசிரியர் ஹாஸ் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவு இந்தக் கருத்தை தகர்ப்பனவாக அமைந்துள்ளது. பலபேருக்கு மாரடைப்பு கண்டது குறித்து இவர் ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். அவர்களின் இரத்தக் குழாயில் எவ்விதத்திலும் இரத்தம் கட்டிப் போவதில்லை என்பதை அவர் கண்டு பிடித்தார். இவ்வித மனிதர்களின் இரத்தக் குழாய்க்குள் குறிப்பிட்ட இடங்களில் இரத்தக் குழாய் உப்பி விடுவதாலும் அல்லது ஏதேனும் சுழற்சி ஏற்பட்டு உருண்டையாக திரண்டு வருதாலும் இரத்த ஓட்டம் தடைப்படுகிறது என்று அவர் கண்டறிந்தார்.

இந்தக் கருத்தை ஹம்பர்க் நிபுணர் பேராசிரியர் எ. ஜோரஸ் ஆதரித்துவருகிறார்". மன உளைச்சலும் நெருக்கடியான சூழ்நிலைகளில் பரபரப்பு அடைவதும், மாரடைப்புக்கு முக்கிய காரணமாகும் என்று அவர் கருதுகிறார். மாரடைப்பு மிகவும் நுண்ணிய சிக்கல் மிகுந்த நோய். மனோநிலையும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாரடைப்பு ஏற்பட்டு இறந்த ஒவ்வொருவரது வாழ்க்கையை சற்று உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால், மாரடைப்பு ஏற்படு

வதற்கு முன்னர் அவர்களுக்கு மன உளைச்சல், நெருக்கடி, மிகவும் அதிர்ச்சியை அளிக்கக்கூடிய சம்பவம் நடந்திருக்கலாம். இது வரை இந்நிகழ்ச்சிகளுக்கு யாரும் முக்கியத்துவம் செலுத்திய தில்லை.

'மானேஜர் நோய்' எனப்படும், "அதிக வேலைப்பாளு" மார டைப்புக்கு காரணம் என்று சொல்ல முடியாது; தவறான வேலை அல்லது பிடிக்காத வேலை மாரடைப்புக்கு ஒரு குறிப்பிடத் தக்க காரணமாகும். சிலர், குறிப்பிட்ட பொழுதுபோக்கு அல்லது கலை அம்சங்களில் ஆர்வம் கொண்டிருக்கலாம். ஆனால் வேலையில் நாட்டம் செலுத்தும் கடமை ஒரு புறம் உந்தித்தள்ள, மற்றொரு புறம் அவர் விரும்பும் பொழுது போக்கு நிகழ்ச்சி ஆசைகாட்ட, வேண்டாத வெறுப்பாக அல்லது படபடப்பாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இது போலவே, காதல் உணர்ச்சியை அடக்கி வைத்தல்; அல்லது திருமணத் தோல்வியை கடும் உழைப்பின் மூலம் "அமுக்கி" வைக்க பலர் முயலுகிறார்கள். இவர்கள் மனத்திற்கு அதிகமான அளவு வேலை தருவதால், இரத்தக் குழாய்கள் படபடப் பாக வேலை செய்து சோர் வடைந்து விடுகின்றன. இறுதி யில் மாரடைப்பு ஏற்படுகிறது

(யூ. பி.எஸ்.)

நிதி இலாக்கா
(Finance Department)

நினைவுக் குறிப்பு (**Memorandum**) எண் **129254—FR/64-4** தேதி **28—10—1965**

(சுருக்கம்)

எலும்புருக்கி நோயால் (**Tuber culosis**) வருந்தும் அரசு ஊழியர்களுக்குத் தனிப் பட்ட விடுக்கை (**Extra-ordinary Leave**) கொடுக்குமுன், அவ்விடுக்கை தரும் அதிகாரி மருத்துவ நற்சான்றிதழை (**Medical Certificate**) அவர் களிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்ட பின்னரே விடுக்கை தரவேண்டும். படிப்பயனோடு கூடிய விடுக்கை (**Leave with allowances**) எடுத்தற்கியலா நிலையிலுள்ள அரசு ஊழியர் களுக்கு மட்டும்தான் கருணைப் படி (**ex-gratia allowance**) பெறும் தகுதியுண்டு. மருத்து வம் முடிந்த பின்னர் மீண்டும் வேலை செய்யத் தகுதியுடையவர் இவர் என்று மருத்துவர் சான்றி தழ் வழங்குவதும் வேண்டும். எந்த அதிகாரி அரசு ஊழியர் களுக்குக் கருணைப்படி வாங்கித் தருகிறாரோ அவர் மருத்துவம் முடிந்தப்பின் இவ்வூழியர் வேலைக் குத் திரும்புவார் என்ற மருத் துவக் குறிப்புரையைச் சம்பளம் பட்டியலில் குறித்து அனுப்பு வார். இவ்விதி அரசு கடைநிலை ஊழியர்களுக்கும் பொருந்தும்.

பேச்சுக் கலை

அறிஞர் சி. என். அண்ணாதுரை

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்ற இருபதாம் ஆண்டுச் சிறப்பு விழா 31–1–-66 அன்று மாலை 6-மணிக்குப் பட்டி மண்டபத்தில் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு எஸ். கே. சம்பந்தம் எம். எல். சி. தலைமை வகித்தார். பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற சட்டக்கல்லூரி மாணவர் திரு துரைமுருகன். எஸ்.ஐ.ஈ.டி. மாணவி திரு கஸ்தூரி ஆகியோருக்குச் சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு எம். ஏ. மாணிக்கவேலு அவர்கள் பரிசுகள் வழங்கினார். திரு. அன்புப்பழம்நீ, திரு. அழ. வள்ளியப்பா ஆகியோர் பேசினர்.

துவக்கத்தில் கவிஞர் கா. வேழவேந்தன் அனைவரையும் வரவேற்றார். திரு. த. கோபால் ஆண்டறிக்கை வாசித்தார். இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது:

"ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம் பேசிப் பயிற்சி பெறும் மன்றம். அதன் 20-வது ஆண்டு விழாவிலே கலந்துகொள்ள வந்த நான் கடந்த இரு நாட்களாகப் பேசிப் பேசி அலுத்துப் போயிருக்கிறேன். பேசிப் பேசி அலுத்துப் போனது மட்டுமல்ல—பேச்சைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போயுமிருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து இங்கு பேசவந்திருக்கின்ற நான் எனக்கு முன் பேசிய அன்புப்பழம்நீ போன்றவர்களின் பேச்சையும் கேட்டேன். இதற்கு முன் பலர் பல்வேறு சிறப்புத் தலைப்புகளின் பேரில் பேசியிருக்கிறார்கள். இந்த மன்றம் கடந்த காலத்தில் சிறப்புமிக்க பொருள்களைப் பற்றி விவாதித்திருக்கிறது என்பதை இங்கு ஆண்டறிக்கை படித்த போது கேட்டுக் கொண்டிருந்த எனக்கு தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் என்னென்ன பேசினார்கள் எப்படியெப்படிப்பேசினார்கள் என்பது எனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் அவர்கள் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள்களின் பட்டியல் பயன் நிறைந்ததாக இருக்கின்றது என்பதை உணர முடிகிறது.

இங்கு எனக்கு முன் பேசியவர்கள் பலர் பல தலைப்புகளின் கீழ் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். ஆனால் எனக்குத் தனி தலைப்பு தரவில்லை. பொருள் குறிப்பிடப்படவில்லை. ஒருவர் பேசிப்பலர் கேட்பதுதான்முறை. ஆனால் ஒருவர் பேசிப் பலர் கேட்கத்தான் வேண்டுமா என்று சிலருக்குத் தோன்றும். ஆகவே ஒருவர் பேசிப் பலர் கேட்கின்ற அந்தப் பொருள் பற்றியே நான் இங்குப் பேச விழைகிறேன்.

ஒருவர் பேசிப் பலர் கேட்கலாம்: ஆனால் பலர் பேசி ஒருவர்

கேட்க முடியாது; கேட்கலாம். ஆனால் எங்காவது ஒரு முச்சந்தியிலோ — அங்காடிச்சந்தையிலோ தான் கேட்கலாம்; மற்ற இடங்களில் கேட்கமுடியாது; அதனால் ஒருவிதப் பயனுமிருக்காது.

பேச்சுக்கலை என்பதே ஒருவர் பேசிப் பலர் கேட்டுப் பயன் பெறு வதென்பதுதான்பேச்சு. பேச்சுக் கலைக்கு அடிப்படை என்ன? பேசக்கூடியவர்கள், பலதரப்பட்டவர்கள் கேட்கத்தக்க கருத்துக்களைப் பற்றிப் பேசுவதுதான். பலர் கேட்கத்தக்க கருத்துக்களைப் பற்றிப் பேசினால் மட்டும் போதாது; கேட்டவர்கள் அதனால் பயன்பெறத்தக்க அளவில் தங்கள்பேச்சைப் பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டும்.

பேசுவதைக் கேட்கப் பலர் வருகிறார்கள் என்றாலே—அவர்களுக்கு ஓய்வு கிடைக்கிறது என்பது விளங்குகிறது. அந்த ஓய்வு நேரத்தை எப்படிச் செலவிடலாம் என்று யோசிக்கின்ற பொழுது இந்தப் பேச்சைக் கேட்கலாம் என்று தோன்றுகிறது.

இந்த எண்ணம் எப்போது தோன்றுகிறது என்றால் தங்களது ஓய்வுநேரத்தை மற்ற வழிகளில் செலவிட்டுப் பார்த்த பிறகு; மற்றவைகளைவிட இந்தப் பேச்சைக் கேட்டால் பயன் விளையும் என்ற முடிவுக்கு வரும் போது தோன்றுகிறது.

ஒருவர் பேசுவதற்கு முன், அவரது பேச்சால் தமக்குப் பயன் கிடைக்குமென்று உள்ளூர உணர்கிறார்கள். அப்படி உணர்கின்ற காரணத்தால்தான் பலர் கூடுகிறார்கள். அப்படிக் கூடுபவர்களிடம் பேசவேண்டியவைகளைப் பற்றிப் பேசவேண்டிய முறையில் பேசவேண்டிய பக்குவம் அறிந்து பேசவேண்டும். இந்த முறையைக் கையாண்டால்தான் உலகின் பல பாகங்களிலே நாகரிகமும் பண்பாடும் வளர்ந்துவந்திருக்கிறது. அந்தப் பேச்சுக்கலை இல்லையென்றால் இவ்வளவு சீர்திருத்தம் ஏற்பட்டிருக்காது. ஒவ்வொரு நாட்டில் சிறந்த பேச்சின் மூலம் சமுதாயம் நல்ல நிலையை அடைய முடிந்திருக்கிறது.

இங்கே பேச்சுப் போட்டியிலே ஒரு அம்மையார் (கஸ்தூரி) பரிசுபெற்றார். அவர் பேசும்போது பெண்கள் என்றாலே அதிகம் பேசுபவர்கள் என்று குறிப்பிட்டார்கள். பெண்கள் அதிகம் பேசவேண்டும் என்று விரும்புகின்றவன் நான். அவர்கள்பேச்சைக் கேட்காவிட்டால் உலகமே இல்லை, ஏனென்றால் அவர்களுக்கு நிரம்ப ஆற்றல் இருக்கிறது. அடுக்களையில் புகுந்தால்-உலையிலுள்ள சாதத்தைக் கரண்டியில் எடுத்தும்-அதிலிருந்து செல்கின்ற ஆவியிலிருந்தே வெந்ததா இல்லையா என்பதைத்தெரிந்து கொண்டு விடுகிறார்கள்; எதை யெதைச் சேர்த்தால் இனிக்கும் என்பது அவர்களுக்குப் புரிகிறது; நமக்கு உணவு போதுமா தேவையா என்பதை நமது விரல்

நுனியின் சிறு அசைவிலிருந்தே கண்டுபிடித்து விடுகிறார்கள். எப்படிச் செய்தால் பொருள்களில் சுவை கூட்டலாம் என்ற பக்குவத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்களிடத்தில் இந்தப் பக்குவமும், பதட்டமிலாத் தன்மையும் ஆற்றலும் அவ்வளவு எதிர்பார்க்க முடியாது. அந்தப் பக்குவம், அரசியல்வரை வளருமானால் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற அல்லல்களே ஏற்பட்டிருக்காது. ஆகவேதான் அவர்கள் நிரம்பப் பேச வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுக்களையில் காட்டுகின்ற அவர்களது ஆற்றல் அரசியல் வரைவளராத காரணத்தால்தான் இன்றுநமக்கு வெந்ததும் வேகாததும் தெரியவில்லை.

ஆனால் பலர் அவர்களின் பேச்சை சில வேளைகளில் விரும்பாததற்குக் காரணம்-அவர்கள், நாம் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குப் பேசிவிடுவதுதான்.

பேச்சு என்பது என்ன? நமக்குத் தோன்றிய கருத்து, பிறருக்கும் தோன்றச் செய்வதுதான். பிறருக்குத் தமது கருத்தை எடுத்து விளக்கி இதை ஏற்குமாறு செய்வதே அதன் நோக்கம். அப்படித்தான் பேச்சுக்கலை வளர்ந்தது; அதிலும் ஜனநாயக நாட்டில் பேச்சுக் கலை வளர்ந்தால்தான் நாட்டில் நல்லவைகளைச் செய்ய முடியும். அதில் அரசியல் கூடாது என்று இங்குப் பேசியவர்கள் கூறியது நினைவுக்கு வருகிறது.

அரசியல் என்றாலே ஏதோ தீண்டப்படாதது என்று கருதி அலட்சியப் படுத்துகிறார்கள். அதை அப்படி அலட்சியப் படுத்தினால் அந்த அரசியலே அவரைத் தீண்டித் தீர்த்துக்கட்டிவிடும். எல்லோர்க்கும் அரசியலில் தொடர்பு இருக்கத்தான் செய்யும். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன்.

வெட்ட வெளியிலே 6மணிக்கு மேலே யாரும் கூட்டம் போடக் கூடாது என்று சட்டமன்றத்தில் நாளையே ஒரு மசோதா கொண்டு வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது வெட்ட வெளியில் வேண்டுமானால் பேசாமலிருக்கலாம். ஆனால் வீட்டுக்குள் 'இப்படி ஒரு சட்டமா'— என்று பேசத்தான் செய்வார்கள்.

ஆகவே அரசியல் நுழையாத இடம் இல்லை. தொடாத ஆள் கிடையாது; ஆகவே அதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று யாரும் எண்ண வேண்டாம்.

'கட்சி' அரசியல் கூடாது— என்று சொல்லுங்கள்—ஒத்துக் கொள்கிறேன். கிளர்ச்சி அரசியல் வேண்டாமென்று கூறுங்கள் —அது எனக்குப் புரிகிறது. மாச்சரியம் கூடாது என்று கூறுங்கள், ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அரசியலே வேண்டாம் என்று மட்டும் சொல்லாதீர்கள்!

தேர்தலின் போது ஒரு ஓட்டுச் சீட்டை மட்டும் பயன்

படுத்தினால் போதும். அரசியலே வேண்டாமென்று பாரதியார் கருதியிருந்தால் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று கூறியிருக்கமாட்டார்.

மன்னர் என்றதும் கிரீடம், இருக்க வேண்டுமா—செங்கோல் தேவையா ?இல்லை.

நாட்டை ஆள உரிமை பெற்றவர்கள் ; ஆளத்தகுதியுள்ளவர்கள் என்று கருதித்தான் பாரதியார் அப்படிக் கூறினார்.

நானும் மன்னன்தான் என்று கூறிக்கொண்டு நாட்டின் வடக்கு எல்லை எது ; தெற்கு எல்லை எது என்று கூடத் தெரியவில்லையென்றால் எப்படி மன்னனாக முடியும்? நமக்கென்ன ? எப்படியோ நடக்கிறது என்ற போக்கும், கவலையில்லாத் தன்மையும் வளருமானால் ஜனநாயகம் தழைக்காது. நாடகத்தில் மன்னனாக வருபவன் கூட மந்திரி பெயரென்ன என்று கேட்டாவது தெரிந்து கொள்வான். ஆகவே அரசியல் என்பது என்னவென்பதை ஒவ்வொருவரும் ஐயந்திரிபற அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொள்வது மட்டுமல்ல மற்றவர்களுக்கு அதனை அறிவிக்கவும் வேண்டும்.

இன்னும் சிலர் அதையே எழுதிக் கொண்டிருப்பார்கள். எழுத்தாளர்கள் பேசுகின்றவர்கள் பயனற்றவர்கள் என்று சொல்வார்கள். பேச்சாளர்கள் எழுதுவதில் என்ன இருக்கிறது என்று நினைப்பார்கள்: இரு தரப்பினருக்குமே 'இவர்களுக்கு என்ன தெரியும்' என்ற நினைப்புதான் அதற்குக் காரணம்.

ஆனால் ஒன்றை மட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள்' பேசுவது என்பதே ஒரு செயல். இதைப் பேசுவதால் என்னபயன் விளையப் போகிறது என்பவர்கள் இதை மறந்து விடக் கூடாது.

பேச்சு என்பதே ஒரு செயலாக இல்லாவிட்டால் அதற்கென்று காலம், இடம், தராதரம் ஆகிய ஒரு ஒழுங்கு இருக்காது. இதை அவர்கள் உணரவேண்டும்.

பேசுவதைத்தான் பிறகு செயலில் காண்கிறோம். பேச்சில் என்ன இருக்கிறதென்று கருதிக் கொண்டு செயலில் இறங்குவது கூடாது. அது பிறகு பொருளற்றதாகி விடக்கூடும்.

இன்னும் சிலர் 'பேசலாம். காரியத்தில் முடிகிற காரியமா ?' என்று கூறுவார்கள். அவர்கள் பேச்சிலிருந்து சில விஷயம் புலப்படுகிறது.

ஒன்று பேசியபடி அவர்கள் நடப்பதில்லை என்பது. மற்றொன்று அவர்கள் முயன்று முயன்று பார்த்து முடியாததால் ஏற்பட்ட இயலாமை — அருவெறுப்பு அப்படிப் பேசச் சொல்கிறது.

அப்படிப் பேசவே கூடாது என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கருதியிருந்தால் அதன் சிறப்புத்தன்மை பற்றி சொல்லியிருக்கவே மாட்டார். அதன் சிறப்பு பற்றி எவ்வளவு

அழகாக - அருமையாக - எப்படி யெப்படிப் பேசவேண்டும், எவரி டத்தில் பேசவேண்டும்; எங் கெந்தக் காலத்தில், எங்கெந்த சூழ்நிலையில் எவ்வாறு பேச வேண்டும் என்பது பற்றிக் கூறி யிருக்கிறார். இவைகளையெல்லாம் அதன் அருமை பெருமை தெரி யாமலா கூறியிருக்கிறார்?

அமைச்சு, தூது, இல்லறம், அஞ்சாமை, துறவறம், கல்வி, என்ற அதிகாரங்கள்; அதில் எவ்வாறு பேச்சுக் கலையைப் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுரைகள்—எவ்வளவு இயற் கைத் தன்மையுடன் கூடிய நுண் ணறிவோடு கூறியிருக்கிறார். அதன் தேவையை அறியாமல் உணராமலா வள்ளுவர் கூறி யிருப்பார்?

எவ்வளவு விதிமுறைகள் பேசு வதுபற்றி வள்ளுவர் கூறியிருக்கி ரூர். அதற்கு அவர் அதிக இடம் தருவானேன்?

பேசுவதென்பது எளிதான காரியம். அதை எங்கே மக்கள் சமுதாயம் அக்கரையற்ற தன்மை யில் பயன் படுத்தி விடுமோ என்று அஞ்சித்தான் அவ்வாறு கூறியிருக்கிறார்.

படக்காட்சிக்குச் செல்கிறோம். அதில் வரும் பாடல்களைக் கேட்டு விட்டு வீட்டுக்கு வரும்போது அந்தப் பாடல்களை அப்படியே பாடிவிடலாம் என்று எண்ணத் தோன்றும். நண்பர்கள் தூண்டி விட்டு 'பாடு'—என்றால் முடி யாது. வீட்டுக்கு வரும்போது மனதிற்குள் பாடிப் பார்த்துக் கொள்வோம். அப்போதுகூட எளிதாகத்தான் தோன்றும். ஏனென்றால் உதடு லேசாக அசையுமே தவிர குரல் எழும் பாது. ஆனால் அதைப் பாடிக் காட்டுகிற போதுதான்—அது எவ்வளவு கடினமானது என்று தோன்றும். அதுபோலத்தான் பேச்சுக் கலையும்.

ஒரு பொருளைப் பற்றிப் பேசு கிறோம் என்றால் அந்தப் பொருள் கேட்கின்றவர்களுக்குப் பயன் விளையுமா என்பதையும் கவனிக்கவேண்டும்.

நான் இங்கே 'பாலைவனத்தில் ஒட்டகம்' என்ற தலைப்பில் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந் தால் கூட்டம் அதிகமிராது. அதையே 'இன்றையப் பாராளு மன்ற நிலைமை' என்ற தலைப்பில் பேசுவதாக அறிவிக்கப் பட்டிருந் தால்—நான் அதில் தொடர்புள் ளவன் என்பதால் இந்தப் பேச் சைக் கேட்டால் பயன் உண்டு என்று அறிந்து நிறையப் பேர் கூடுவார்கள்.

பேசுவதையும் விளக்கமாகப் பேசவேண்டும். அதிகமாகப் பேச வேண்டியதற்கு அதிகமாகவும், குறைத்துப் பேசவேண்டியதற் குக் குறைத்தும் பேசவேண்டும்!

உதாரணத்துக்கு ஒன்று சொல்வேன்.

ஒரு பேராசிரியர்-ஒரு மன் றத்தில் ஆங்கிலத்திலே பேசுவ தாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் பேச இருந்த தலைப்பு 'அயர்லாந்திலே பாம்புகள்'— என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த நாளில் - குறித்த இடத்தில்-குறிப்பிட்டபடி பேராசிரியரின் பேச்சைக்கேட்க பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். கூட்டம் நடத்துவோர் பேராசிரியரை மக்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்த பிறகு அவர் பேச ஆரம்பித்தார். அவர் சொன்னார்.

இங்கே ‘அயர்லாந்தில் பாம்புகள்’—என்ற தலைப்பில் நான் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாக அது பற்றிப் பேச விரும்புகிறேன்.

“அயர்லாந்தில் பாம்புகளே இல்லை”-என்று கூறி விட்டு அமர்ந்து விட்டார்.

பேச்சை—குறைத்துப் பேசுவதுதான் திறமையை எடுத்துக் காட்டும் என்று நினைப்பது தவறு. அதுவே ஒரு திறமை அல்ல.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். பேச்சிலே என்ன இருக்கிறது என்பார்கள். பேசிப் பயனில்லை என்று சொல்வார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருப்பதுதான்.

பேச்சு-உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக் கூடியது. உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக் கூடிய பேச்சைப் பக்குவமாகத்தான் பயன்படுத்தவேண்டும். உணர்ச்சியினைத் தட்டி எழுப்புகிற ஆற்றல் உடையது என்பதற்காக அத்தகைய பேச்சை மிதமிஞ்சிப் பயன் படுத்திவிடக் கூடாது. அப்படிப் பேசினால் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்திவிடும். அதற்காக எழுச்சியே ஏற்படக் கூடாது என்றும் கருதிக்கொண்டும் பேசக்கூடாது.

பேச்சில் எழுச்சியும் இருக்க வேண்டும் — அதே சமயத்தில் அளவோடும் இருக்கவேண்டும். இதற்கென்று இலக்கணம் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை.

பயிற்சிதான் இதற்கு இலக்கணம். அனுபவம்தான் இதற்குப் புத்தகம். அனுபவமும், பயிற்சியும் எடுத்த எடுப்பில் கைவந்து விடாது. நாளடைவில் எடுத்துக்கொண்ட முயற்சிக்குத் தக்க அளவுதான் கைவரப் பெறும்.

நாம் பேச வேண்டுமென்பதற்காக கற்றவைகளை எல்லாம் கொட்டிவிட வேண்டுமென்ற துடிப்பு கூடாது. பேசுபவர்களுக்கும் கேட்பவர்களுக்குமிடையே நெருங்கிய தோழமைத் தொடர்பு இருக்கவேண்டும்.

இன்னும் சிலர் நாம் பேசினால் பிறரது மனம் புண்பட்டுவிடுமே என்று கருதிக்கொண்டு உண்மையைக் கூற அஞ்சுவார்கள். இந்த அச்சம் கூடாது—அதற்காகப் பிறரைப்புண்படுத்த வேண்டுமென்பதற்காகவே பேசவேண்டுமென்ற அரிப்பும் கூடாது.

ஜனநாயக நாட்டில் ‘நமக்கேன் பொல்லாப்பு’ என்று உண்மையைக் கூற அஞ்சுவோமானால்—பிறர் மனம் புண்படுமே என்று தயங்கினால் பிரயோசனமில்லை.

ஜனநாயக நாட்டில் — ஆள்

கின்ற தன்மை — திட்டங்களை நிறைவேற்றுகின்ற செயல் திறன் —அதன் அளவு—பெறுகின்ற பயன்—அதனால் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற உயர்வு, தாழ்வு ஆகியவற்றைச் சரியாக மதிப்பிட்டு அறிவாளிகள் பேசாமல் இருந்து விடுவார்களானால் நிச்சயமாக ஜனநாயகம் பாழ்பட்டுப் போய்விடும்.

முன்னால் கூறியபடி பேசுவது பக்குவமாகவும்—அதே சமயத்தில் கூறுவதை அழுத்தமாகவும் பேசினால் அதனால் நாட்டுக்கு நல்ல பயன் ஏற்படும்.

எடுத்துச் சொல்லவேண்டிய உண்மையை மறைக்காமல் சொன்னால்—இன்னார் மனம் புண்படுமேயென்ற பயம் கூடாது. இரண்டுக்கு மிடையே ஒரு மையத்தைக் கண்டு பிடித்துப் பேச வேண்டியது அவசியம். இதற்கும் வேறு இலக்கணம் கிடையாது. பயிற்சிதான் அவசியம்.

'பிறர் மனம் புண்படுமே' என்ற பயம் அடிப்படையற்றது. ஒரு காலத்தில் பிறரைப் புண்படுத்தக் கூடியது என்ற விஷயம். மற்றொரு காலத்தில் அதுவே வரவேற்கக் கூடியதாகிவிடும்.

இன்று அந்த நிலைமையைக் காண்கிறோம். பிறர் மனதைப் புண்படுத்தாத வகையில் பக்குவமாகப் பேசும் ஒரு நிலை இன்று வளர்ந்திருக்கிறது. வெகுவாக மாறியிருக்கிறது.

சீதையை ராமன் காட்டுக்கு அனுப்பினான்- என்று 20,25 ஆண்டுகளுக்கு முன்பு கூறும் போது பலருக்கு அப்போது சீற்றம் வந்தது. இன்று அத்தகைய சீறுகின்ற மனப்பான்மை இல்லை.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'பேருந்து நிலையம்' என்று சொன்னால் புரியாதது மட்டுமல்ல: இப்படிச் சொன்னால் அன்றைக்குச் சிலரது மனம் புண்பட்டது.

பட்டிமன்றம் என்ற சொல் இன்று வெகுவாக கவர்ந்திருக்கிறது; அன்றைக்கு இதைச் சொன்னால் என்ன விக்கிரமாதித்தன் பட்டிமன்றமா? ஆடு அடைக்கும் பட்டியா? என்று கேட்பார்கள். இன்று அத்தகைய நிலைமை இல்லை.

நீங்கள் எல்லாரும் ஒரு வகையில் பெரும்பேறு பெற்றவர்கள். நீங்கள் இங்கே தலைவரைப் பார்க்கிறீர்கள்; சொற்பொழிவைக் கேட்கிறீர்கள். நான் என் முன்னே மக்களைக் காண்கிறேன்.

இதையே 20, 25ஆண்டுகளுக்கு முன் நான் மகா ஜனங்களைத்தான் கண்டேனே தவிர மக்களைக் காணவில்லை. அக்ராசனர் தலைமையில் பேசியிருக்கிறேனே தவிர அவைத்தலைவர் தலைமையில் பேசவில்லை. பிரசங்கம் கேட்டிருக்கிறேனே தவிர சொற்பொழிவைக் கேட்கவில்லை. 20,23 ஆண்டுகளாக இன்றைய நிலைமை ஏற்பட

தவமாய்த் தவம் கிடந்து இன்று அவைகளைக்காண்கிறேன்.

குழந்தைகளுக்குத் தாய்மார்கள் உணவை ஊட்டும்போது சில சமயங்களில் அதைத் துப்பி விடும். அது துப்பி விடுகிறது என்பதற்காகத் தாய்மார்கள் அதை ஊட்டாமலிருப்பதில்லை. அதற்குப் போதுமென்றால்தான் நிறுத்துவார்கள். போதுமென்கின்ற போதும் குழந்தை உணவைத் துப்பி விடும்.

தாய்மார்களுக்குப் போதுமென்ற குழந்தையின் மன நிலையும், வேண்டுமென்றே துப்புகின்ற மனோநிலையும் புரியும். அந்தப் பரிபக்குவம் பேச்சாளர்களுக்கு ஏற்பட வேண்டும். இதற்கும் பயிற்சிதான் முக்கியம். வேறு புத்தகம் கிடையாது.

இப்படி மனித சமுதாய முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாத கலையை நீங்கள் சிறந்த முறையில் பயன் படுத்தி நாட்டின் நல்வாழ்வுக்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"முரசொலி"

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி B. A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 8 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

ஆசிரியர்—அன்றும் இன்றும்

(பேராசிரியர் ம. இராசமாணிக்கம், எம். ஏ.)

ஆசிரியத் தொழில் புனிதத் தன்மை வாய்ந்தது. மதிப்பிற்குரியது என்பதிலோ ஆசிரியர்கள் புனிதமானவர்கள் மதிப்பிற்குரியவர்கள் என்பதிலோ கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. தொழில்களிலே ஒன்று என்று அதனைக் கூறுவதானால் தொழில்களிலெல்லாம் தலைமையானதாக அதனைக் கூறலாம். மதிக்கப்படுவதற் குரியவர்களின் பட்டியல் ஒன்றைத் தொகுத்தால் அதில் முதலிடம் பெறுவதற்குரியவர்கள் ஆசிரியர்கள் என்பதும் மறுக்கவியலாததொன்று. தொழில்களிலே ஒன்றான ஆசிரியத் தொழிலைச் செய்கின்றார்கள் என்ற காரணத்தால் மட்டுமல்லாமல் தொழில்களுக்கெல்லாம் மூல காரணமான தொழிலைச் செய்கின்றார்கள் என்பதனால் கூட அவர்கள் மதிப்பிற்குரியவர்கள் ஆகின்றார்கள். வேற்றுத் தொழில்களால் விளைகின்ற தீமைகள் சிறிதும் விரவப்பெறாத புனிதத் தொழிலைப் புரிகின்றார்கள் என்ற ஒரு காரணத்திற்காகவே அவர்கள் மதிக்கப்படலாம். எனவே செய்யுந் தொழிலால் சிறப்புப் பெறுதற்குரிய வாய்ப்பை இயல்பாகப் பெற்றவர்கள் ஆசிரியர்கள் எனலாம்.

அனைவருடைய கவனமும் ஆசிரியர்கள் பால் திரும்புவதை எங்கும் காண்கின்றோம். அதற்குத் தொழிலில் தூய்மையை உணர்ந்துதான் இங்ஙனம் கவனிக்கின்றார்கள் என்று சொல்லுவதற்கில்லை. அந்தத் தொழிலின் சிறப்பை - முக்கியத்துவத்தையுணர்ந்துதான் அங்ஙனம் கவனிக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கின்றது. எதிர்கால அமைப்பு ஆசிரியத் தொழிலில் அடங்கிக்கிடக்கின்றது. எதிர்காலத்தை உருவாக்கும் எண்ணற்ற சிறுவர் சிறுமியர் ஆசிரியர்களின் நிழலில் வளருகின்றார்கள். அவர்களை ஆசிரியர்கள் விரும்பினால் எப்படி வேண்டுமானாலும் வளர்க்கலாம். எதிர்காலச் சிற்பங்களை வடித்து வார்க்கின்ற பெரும் பொறுப்பு ஆசிரியர்கள் பால் அமைந்து கிடக்கின்றது. இந்தப் பெரும் பொறுப்பை ஏற்று அமைதியாக, ஆரவாரமின்றி, விளம்பரமின்றிச் செம்மையாகச் செய்கின்றார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவேனும் அவர்கள் அனைவராலும் போற்றப்படலாம், பாராட்டப்படலாம், மதிக்கப்படலாம்.

எனவேதான் நமது முன்னோர்கள் ஆசிரியரைப் போற்றினார்கள். எண்ணின் பெருமையையும் எழுத்தின் சிறப்பையும் அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். ஆகவே தான் அவர்கள் எண்ணையும்

எழுத்தையும் கண்ணெனப் போற்றினார்கள். கண்களைத் திறந்து வைத்துக் கலக்கந் தீர்த்த பெரியோர்களை மனிதர்களில் ஒருவராக மதிக்கலாமா? ஆகையினாலேதான் எழுத்தறிவித்த அவர்களை இறைவர்களாக-தெய்வங்களாகக் கருதிப் போற்றினர், வழிகாட்டினர்.

மதிக்கப்படுவது, போற்றப்படுவது என்பனவெல்லாம் சட்டங்களினாலோ திட்டங்களினாலோ உண்டாக்கக்கூடியனவல்ல. மதிக்கப்படுவதற்கு, போற்றப்படுவதற்கு உரிய சூழ்நிலைகளை மற்றவர்கள் உண்டாக்கத்தான் வேண்டும். வறுமையிலே ஆசிரியத் தொழில் புடம் போடப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது நல்லதுமல்ல. எத்தகைய சூழ்நிலைகளை மற்றவர்கள் அமைத்துத் தந்தாலும் அவற்றால் ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பு வரும் என்று நினைப்பதற்கில்லை. அதனைத் தமது திறமையால் முழு அளவில் தேடிக்கொள்பவர்கள் ஆசிரியர்களாகத்தான் இருக்க முடியும்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்
பானும் தன்னை
நிலை கலக்கிக் கீழிடுவானும்—
நிலையினும்
மேன்மேலுயர்த்தி நிறுப்பா
னுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந்தான்.

என்பது நாலடியார் தன் முயற்சி-சுய முயற்சி குறித்துக் கூறும் கருத்தாகும். ஒவ்வொருவரும் தன்னைத்தானே ஆக்கிக்கொள்ளவும்—வளர்த்துக் கொள்ளவும், அழித்துக்கொள்ளவும் இயலும் என்பது இதன் கருத்து. அவனவனுடைய செயல்களிலே ஆக்கமும் அழிவும் அமைந்து கிடக்கின்றது எனலாம். இது சிறப்பாக ஆசிரியர்களுக்குப் பொருந்தும் என்று கூறலாம். மற்றவர்கள் எந்த அளவு பக்கதுணையாக இருந்து ஆசிரியர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யவேண்டுமென்று கருதினாலும் அதனால் ஆசிரியர்கள் வாழ்வு ஓரளவு வளம்பெறும். மதிப்புப்பெறும். முழு அளவு ஆசிரியர்கள் அனைவரிடத்திலும் மதிப்பைப் பெறவேண்டுமானால் அது அவர்கள் கையில்தான் அமைந்து கிடக்கின்றது.

அனைவருடைய கண்களிலும் ஆசிரியர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக மதிப்பிற்குரியவர்களாகக் காட்சியளிக்கவேண்டும். இவற்றை அவர்களே தங்கள் திறமையால் உண்டாக்கிக்கொள்ளவேண்டும். மற்றவர்கள் கண்களிலே ஆசிரியர்கள் இவ்வாறு காட்சியளிப்பதற்கு முதற்படியாக மாணவர்கள் கண்களிலே அவர்கள் இவ்வாறு காட்சியளிக்க வேண்டும். மாணவர்கள் கண்களிலே மாட்சிமையுடையவர்களாகக் காட்சியளிப்பதுதான் மற்றவர்கள் போற்றுவதற்குரிய சிறந்த வழி. மாணவர்களால் போற்றப்படாதவர்கள் மற்றவர்களால் போற்றப்படுதல் இல்லை. மாணவர்களே எதிர்கால மக்கள் என்பதை ஆசிரியர்கள் உளங்

கொள்ளவேண்டும். அவர்களாலேயே தம்பெயர் எங்கும் பரவுகின்றது என்பதையும் ஆசிரியர்கள் உணரவேண்டும்.

ஆசிரியர்கள் தாங்கள் செய்யும் தொழிலின் சிறப்பை, பொறுப்பையுணர்ந்து செய்யவேண்டும். தம் தொழிலை அவர்கள் சிறப்பாகச் செய்யவில்லையானால் அதனால் உலகில் விளைகின்ற கொடுமைகளை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். புற இருளை நீக்கும் கதிரவன் போன்று அக இருளை நீக்குகின்றோம் நாம் என அவர்கள் அறியவேண்டும். புனிதத் தொழில் புரிகின்ற பேறு நமக்குக் கிட்டியதே என்ற மன நிறைவோடும் அவர்கள் பணி புரிதல் வேண்டும்.

இத்தகைய பணிக்குத் தேவைப்படுகின்றவர்கள் உண்மையிலேயே இந்தப் பணியில் விருப்பமுடையவர்களாக இருக்கவேண்டும். இந்தத் தொழிலில் விருப்பமில்லாதவர்களும் வெறுப்புடையவர்களும் இப்பணியில் ஈடுபட நேர்ந்தால் அவர்களால் அதனைச் சிறப்பாகச் செய்யமுடியாது போகின்றது. பணிகளில் தலைசிறந்த பணியாகக் கருதப்படுகின்ற இதற்குத் தக்கவர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இப்பணி சிறப்பாக நடைபெறும்.

மாணவர்களால் மதிக்கப்படுகின்றவர்களே மற்றவர்களாலும் மதிக்கப்படுவார்கள். மாணவர்களிடை மதிப்புப் பெருதார் மற்றையோரிடத்தும் மதிப்புப் பெறுதல் என்பது இல்லை; மாணவர்கள் தாம் எதிர்கால மக்கள். அவர்களின் நன்மதிப்பை ஆசிரியர்கள் பெறவேண்டும். ஆசிரியர்களைக் கண்ட அளவிலேயே மாணவர்கள் தங்களையறியாது மகிழவேண்டும். அம்மகிழ்ச்சியும் அச்சத்தின் எல்லைக்குட்பட்டும் இருக்கவேண்டும். எடுத்துச் சொல்லவும் இயலாததாய் உள்ளத்தாலேயே உணர்ந்து மகிழ்வதாக அது அமையவேண்டும். அந்த அளவில் ஆசிரியர்கள் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கவேண்டும். வெளியூர் சென்று திரும்பி வருகின்ற கணவனைக் கண்ட மனைவி 'வாருங்கள் வாருங்கள் என்று' மற்றவர்களை வரவேற்பது போன்று வரவேற்பதில்லை. உள்ளங் களிகொள்ள அதன் சின்னமாக முகம் மலர்ந்து நிற்க, புன்முறுவல் வரவேற்பளிக்க மிகப் பணிவோடு ஏதும் பேசுதலின்றி எழுந்து நின்று வரவேற்பளிப்பாள். இக்காட்சியைக் காணுகின்றார் இக்காலக் கவிஞர் ஒருவர். வகுப்பில் அவர் காலடி எடுத்து வைத்த அளவில் புன்முறுவல் தவழ எழுந்து நின்று மாணவர்கள் வரவேற்பளிக்கும் காட்சியை அவர்,

தலைவனைக் காணும் தலைமகள் புரையக்
கலைவல் லாசானைக் கண்டுகளி சீந்தும்.

என்று கூறுகின்றார். ஆசிரியர்கள் மொழியே மறைமொழி. அவர்கள் இட்டதே சட்டம் என

மாணவர்கள் உளமார நினைக்கின்ற வகையில் அவர்களுடைய உள்ளங்களை ஆசிரியர்கள் பிணித்திருக்கவேண்டும். வாழுநாள் முழுவதும் ஆசிரியர்களின் நல்ல நினைவு தேவைப்படுகின்ற பொழுதெல்லாம் வந்து வந்து போக வேண்டும் மாணவர் உள்ளங்களில்.

மாணவர்கள் தங்களை மறக்கின்ற வகையில் ஆசிரியர்கள் பாடங் கற்பிக்கவேண்டும். கற்பிக்கின்ற பாடங்களில் மாணவர்கள் மேலும் மேலும் முயன்று கற்று முன்னேற ஆசிரியர்கள் வழி வகுக்க வேண்டும். மாணவர்களின் சிந்தனை தூண்டப் பெறுதல் வேண்டும். ஆசிரியர்கள் கூறும் நுண்ணிய பொருளை அவர்கள் அறிந்து மகிழவேண்டும். அதனைக் கண்டு ஆசிரியர்கள் மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும். இத்தகைய இன்பத்தைத் திருவள்ளுவர் "ஈத்துவக்கும் இன்பம்" என்பர்.

நாள்தோறும் அறிவை வாரி வழங்கும் ஆசிரியர்கள் நாள்தோறும் அறிவைச் சேமிக்கும் பழக்கமுடையவராகவும் இருக்க வேண்டும். நிரம்ப நூல்களை அவர்கள் படிக்கவேண்டும். பல கலையறிவும் அவர்கட்கு வேண்டும். சேர்த்தலின்றிச் செலவு மட்டும் செய்து கொண்டிருப்பாராயின் நாளடைவில் அறிவில் வறுமையுற்று அல்லற்பட நேரிடும். கூறிய கருத்துக்களையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு தனக்கோ பிறர்க்கோ ஆர்வமில்லாத வகையில் காலத்தைக் கழிக்க நேரிடும். எனவே ஆசிரியர் தொழில் வளர்ச்சிக்கு மிக மிக இன்றியமையாதது. ஆசிரியர்கள் பல கலையறிவையும் பெற்றிருப்பதே நன்று. அப்பொழுதுதான் ஆசிரியர்களால் மாணவர்களின் உள்ளங்களைக் கவர இயலும்.

ஆசிரியர்களிடத்து எதிர்பார்க்கப் படுவது மற்றொன்றுமுண்டு. அதுதான் ஒழுக்கம். மாணவர்கட்கு முன்னோடியாக, அவர்களால் பின்பற்றப்படுவோராக ஆசிரியர்கள் விளங்கவேண்டுமென்பதே. ஆசிரியர்களைப் பின்பற்றியே நடக்க விரும்பும் உள்ளமுடையவர்கள் இளைஞர்களாகையால் ஆசிரியர்கள் ஒழுக்கத்தில் மட்டுமல்லாமல் குணத்திலும் குன்றாக நிற்கவேண்டும். நல்லொழுக்கங்களைப் போதிப்பவர்கள் நல்லொழுக்க முடையவராக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் தவறில்லையல்லவா! ஆகையால் ஆசிரியர்கள் ஏதோ கற்பிக்கின்றோம் என்றிருத்தல் கூடாது. அதற்கு ஒத்தவாறு ஆசிரியர்கள் நடந்து கொள்ளவும் வேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியர்களிடத்து மாணவர்கட்கு தன் மதிப்பு உண்டாகும்.

பண்டைய குருகுலங்களில் இத்தகைய சூழ்நிலையைக் காண முடிந்தது. ஆசிரியர்களோ குலநல முடையார், தெய்வந் தெளிந்த தூயோர். கலையில் தெளிவும் கட்டுரை வன்மையு

முடையவர்கள். நிறையினும். பொறையிலும் நிலமகளை யொத்து நின்றார்கள். அளக்கலாகா அறிவாழமும் அசைக்க முடியா திண்மையும் உண்மையும், உடையவர்களாயிருந்தார்கள். நடுவு நின்ற நன்னெஞ்சினர். காட்சிக் கெளியர். கடுஞ் சொல்லர் அல்லர். அகமும் முகமும் மலர அமர்ந்திருந்தனர். உரைக்க வேண்டிய பொருள்களை உள்ளத்தமைத்துக் கொண்டார்கள். விரையாமலும் வெகுளாமலும் என்றும் இனியராய்க் கொள்வோர் கொள்ளும் வகையறிந்து கற்பித்தனர். தம்மையடைந்த மாணவர்களைத் தாம் பெற்ற மக்களினும் பெரிதுவந்து போற்றினர்.

மாணவர்களும் ஆசிரியர் குணத்தோடு பழகி அவர் குறிப்பில் நின்றனர். சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கிப் பாடங் கேட்டனர். நீர் வேட்கை யுடையவர்களைப்போல ஆராத அவாவுடையவர்களாக அவர்கள் விளங்கினார்கள். செவியை வாயாகக் கொண்டனர். நெஞ்சம் அறிவைச் சேமித்து வைக்கும் நிலைக்களமாயிற்று. கேட்டவை அனைத்தையும் கெடாதுளத்தமைத்தனர். அழலின் கண் பயன் பெறுவார் போன்று ஆசிரியரை அணுகாமலும் அகலாமலும் இருந்து பயன் பெற்றார்கள். ஐயமெழுந்த போதெல்லாம் ஆசிரியரை யடைந்து ஐயந் தீரப் பெற்றார்கள். தம்மோடு பயில்வாரோடுந் தாம் பழகினார்கள். அறிவின் சிகரமாக, பண்பின் வடிவமாக அவர்கள் விளங்கினார்கள். உண்மையாகவே அவர்கள் மாணவர்களாக மாட்சிமையுடையவர்களாக விளங்க வாய்ப்பிருந்தது.

இவைகளனைத்தும் எழுத்தறிவித்தவனை இறைவனாகக் கருதிய காலத்திய ஆசிரியர் வரலாறு, மாணவர் வரலாறு, குருகுல வாழ்க்கை வரலாறு.

ஆனால் இன்று ஆசிரியர்கள் நிலை அவ்வாறு இல்லை; மாணவர்கள் நிலையும் அப்படியே. குருகுல வாழ்க்கையும் பழங்கதையாகவே நிற்கின்றது. கால வெள்ளம் நிலையை அடியோடு மாற்றியமைத்திருக்கின்றது. ஆசிரியரிடத்து இன்று மாணவர் செல்வதில்லை. மாணவரிடத்தும் ஆசிரியர் செல்வதில்லை. இருவரும் பொதுவிடம் ஒன்றிற் புகுந்து வாழ்கின்றார்கள். குருகுலம் கல்விக்கூடமாக மாறிற்று. அனைத்தும் அப்படியே மாறுதல் பெற்றன; தொழில்களில் ஒன்றாக ஆசிரியத் தொழிலுமாயிற்று. மக்களில் ஒரு பகுதியினராக ஆசிரியர்களுமாயினர். ஆசிரியத் தொழில் போன்று புனிதத் தன்மை வாய்ந்தது வேறொன்றுமில்லை யென்ற கருத்து மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

குருகுலங்களை இனிக்கொண்டு வர இயலாது. ஆனால் குருகுலங்களின் இயல்பை, சிறப்பைக் கொண்டு வரவேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் சடைமுடி உடையோராய்த் திகழவேண்

டுமென்பதில்லை. குருகுல ஆசிரியர்களின் பண்புகளை ஆசிரியர்கள் பெற்றே திகழ வேண்டும். மாணவர்கள் அனைவரும் அந்நாளைய மாணவர் போன்று அடிபணிந்து எழுந்து, இருவென இருந்து, சொல் எனச் சொல்ல வேண்டுமென்பதில்லை. அவர் போன்று அடக்கம் ஒடுக்க முடையுடையவராய் நற்குணங்கள் அனைத்தும் நிரம்பப் பெற்றோராய் விளங்கவேண்டுமென்பதில் யாருக்கும் ஐயம் ஏற்பட முடியாது. ஆசிரமம் தான் வேண்டுமென்பதில்லை. ஐந்தடுக்கு மாளிகையானாலும் தவறில்லை. வேண்டுவதெல்லாம் குருகுல வலாயர்களின் பண்பு, மாணவர்கள்ஒழுக்கம், ஆசிரியர் அமைதி.

இவை அமையுமானால் இன்றும் ஆசிரியத் தொழில் சிறப்புற்று வளரும். ஆசிரியர்களும் அவ்வாறு போற்றப் படத்தக்க நன்னிலையை யடைவார்கள். மாணவர்களால் முதலில் ஆசிரியர்கள் நன்கு மதிக்கப்படுவார்கள். மற்றவர்களாலும் அவர்கள் பெரிதும் போற்றப் படுவார்கள். ஆசிரியர்கள் நிலையை உயர்த்த, உலகம் போற்ற மற்றவர்களால் செய்வதற்குரியன உள வெனினும், ஆசிரியர்களால் செய்யத் தக்கனவே பெரும்பான்மையும் என்று அறியவேண்டும். ஆசிரியர்கள் எந்த அளவு தங்கள் கடமையை யுணர்ந்து செய்கின்றார்களோ அந்த அளவு ஆசிரியத்

31ஆம் பக்கம் பார்க்க

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

வாழைப் பழத்தின் குணம்

வாழைப்பழம் நல்ல இனிப்புள்ள பழம். எனினும் நீரிழிவு நோயாளிகள் அதைத் தயக்கமின்றித் தின்னலாம். ஏனெனில் அதில் உள்ள சர்க்கரைச் சத்தானது. சாதாரண சர்க்கரையை விடச் சீக்கிரமாகச் செரிக்கவும் பயன் படுத்தப் பெறவும் கூடியது. பொதுவாகப் பழச் சர்க்கரைகளே இப்படித்தான். உடலில் விரைவாகச் சக்தியாக மாற்றப்பட்டுவிடும்.

இருதய நோய் உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்த ஏற்றம் (High Blood Pressure) உள்ளவர்களுக்கும் நாள்தோறும் வாழைப்பழம் சாப்பிடுவது நல்லது. இந்நோய்களில் உப்பு உதவாது. எவ்வளவுக்கு அதைக் குறைவாகச் சேர்க்கிறார்களோ, அவ்வளவுக்கு கைகால்களில் நீர் கட்டுவதும் வீங்குவதும் குறைவாக இருக்கும். நீர் கட்டினால், அதைப்போக்க உட்கொள்ளும் மருந்துகளினால் உடலில் உள்ள பொட்டாசியம் என்னும் சத்து சிறிது சிறிதாகச் சேதமாகக் கூடும். அதற்கு ஈடு செய்யப் படுவது அவசியம். இந்த நிலையிலே வாழைப்பழம் மிகவும் பொருத்தமான உணவாகும். ஏனெனில் அதிலே சோடியமும், உப்பும் கிடையாது ; பொட்டாசியமும் பெரும் அளவில் உள்ளது.

வாழைப்பழம் ஒருங்கே மலச்சிக்கலுக்கும், வயிற்றுப் போக்குக்கும் நல்லது. என்றைக்காவது செரிக்காமல் வயிறு கழிந்தால், நல்ல கனிந்த பழமாக ஒன்று, இரண்டு சாப்பிட்டுப் பாருங்கள். குடல் விரைவில் தன் நிலைக்கு வந்துவிடும். மேலும் இரைப்பை யழற்சி, பெருங்குடலழற்சி, சீரணப்புண் (peptic ulcer) ஆகிய இந் நோய்களில் எல்லாம் வாழைப் பழம் புசிக்கலாம்.

அதிலே கலெஸ்ட்டரால் என்ற கொழுப்புச் சத்து சிறிதும் கிடையாது. எனவே வாழைப் பழம் சாப்பிட்டால் உடல் கனம் அதிகமாகி விடும் என்று பயப் படுவதற்கு இடமே இல்லை.

வாழைப்பழத்தில் ஐந்துவகையான வைட்டமின்கள் இருக்கின்றன ; வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சீ', ரைப்பிளேவின் (பீ2), தையமின் (பீ1) நையசின். இதை தவிர, அதிலே கால்சியமும் இரும்பும் பொட்டாசியமும் மாக்னீசியமும் கந்தகமும் ஆகிய முக்கிய உலோகச் சத்துக்களும் உள.

வாழைப்பழத்தை எந்த வயதிலும், எந்த வேளையிலும், எந்த இடத்திலும் சாப்பிடலாம்.

— " நல்வழி "

30ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழிலின் அருமை பெருமை வளரும். கடமையைச் செய்வதன்மூலம் எந்த அளவு மாணவர்களால் அவர்கள் போற்றப்படுகிறார்களோ அந்த அளவு உலகமும் அவர்களைப் போற்ற மறக்காது.

— பத்மஜோதி.

உயர்தர கல்வித்துறை சுதந்திரம்

டாக்டர் செரியன் வலியுறுத்தல்

உயர்தரக் கல்வி விஷயத்தில் பிறர் தலையீடு இன்றி பூர்ண சுதந்திரம் இருக்கவேண்டியது அவசியம் என்றும், அறிவுத் துறை சுதந்திரத்திற்கு இது தேவை என்றும் மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் பி. வி. செரியன் நாகபுரி கலாசாலையில் 46–வது பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். ஆசிரியர்கள் தமக்கு சரியானதாகத் தோன்றுவதைப் போதிப்பதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும் என்றும் இது தான் கல்வித்துறை சுதந்திரம் என்றும் டாக்டர் செரியன் கூறினார். பாடத்திட்டத்தின் தேவைகளைத் தெரிவிப்பதில்தான் ஆசிரியர்களின் நேரம் விரயமாகின்றதென்றும், இது விரும்பத்தக்கதல்லவென்றும் டாக்டர் செரியன் கூறினார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட பாடங்களை போதித்து முடித்து விடவேண்டும் என்பதில்தான் ஆர்வம் காட்டப்படுவதாகவும், இதனால் ஆசிரியர்கள் தமக்குச் சரியாகத் தோன்றுவதைப் போதிக்க முடிவதில்லை என்றும் டாக்டர் செரியன் கூறினார். பெரும்பாலான கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதும், ஆசிரியர்களை நியமனம் செய்வதும், பெரும்பாலான கல்லூரிகளை நடத்தும் தனியாரிடம் இருப்பதாக அவர் கூறினார்.

சர்வகலாசாலைகளை ஆரம்பிக்கவும், அவற்றைப் பராமரிக்கவும், அரசாங்கத்தையே பூரணமாக நம்பியிருக்கக் கூடாது. நகர சபைகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களும், தனிப்பட்ட நன்கொடையாளர்களும், கல்லூரிகளை ஆரம்பித்து நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்று அவர் கூறினார். ஜனநாயக ஆட்சி முறையில் உயர்தரக் கல்வியில் அரசாங்க தலையீட்டின் அபாயங்களை வலியுறுத்த வேண்டுவதில்லை. ஏனெனில் அரசாங்கம் உயர்தர கல்வித்துறை சுதந்திரத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்திருப்பதாக டாக்டர் செரியன் கூறினார்.

பாரதத்தின் புதிய மந்திரி சபை

கேபினெட் மந்திரிகள் (CABINET MINISTERS)

1. திருமதி இந்திரா காந்தி—பிரதம மந்திரி-அணு சக்தித்துறை.
2. திரு ஜி. எல். நந்தா—உள்துறை
3. ,, ஜெகஜீவன் ராம்—தொழிலாளர் - வேலை வாய்ப்பு.
4. ,, சர்தார் சுவரண்சிங்—வெளி விவகாரம்.
5. ,, எஸ். கே. பாட்டீல் ரயில்வே.
6. ,, ஓய். பி. சவான்—பாதுகாப்பு
7. ,, என். சஞ்சீவ ரெட்டி—போக்குவரத்து, விமானம், கப்பல், உல்லாசப் பயணம்.
8. ,, சி. சுப்பிரமணியம்—உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு.
9. ,, சசீந்திர சௌத்திரி—நிதி
10. ,, சத்தியநாராயண சின்ஹா—பார்லிமெண்ட் விவகாரம், செய்தித் தொடர்பு.
11. ,, எம். சி. சாக்ளா—கல்வி.
12. ,, டி. சஞ்சீவய்யா—தொழில்.
13. ,, அசோக மேதா—திட்டத்துறை
14. ,, மனுபாய் ஷா—வர்த்தகம்
15. ,, ஜி. எஸ். பதக்—சட்டம்
16. ,, பக்ருதீன் அகமத்—நீர்ப்பாசனம், மின் சாரம்.

❊

ராஜாங்க மந்திரிகள் (Ministers of State)

1. திரு ஜே. எல். ஹாத்தி உள்துறை
2. ,, ஏ. எம். தாமஸ்—பாதுகாப்பு
3. ,, தினேஷ்சிங்—வெளி விவகாரம்
4. ,, சி. எம். பூனச்சா—போக்குவரத்து, கப்பல், விமானம், உல்லாசப்பயணம்.
5. ,, பி. கோவிந்தமேனன்—உணவு, விவசாயம், கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி.
6. ,, ராம்சுபாக் சிங்—ரயில்வே
7. ,, புபேந்திர மிஸ்ரா—தொழில்
8. ,, பி. ஆர். பகத்—நிதி
9. ,, சி. ஆர். பட்டாபிராமன்—சட்டம்
10. ,, மெகர்சந்த் கன்னா—வீட்டு வசதி
11. ,, டி. என். சிங்—இரும்பு, உருக்கு
12. ,, ஓ. வி. அழகேசன்—பெட்ரோலியம், ரசாயனம்
13. ,, ரகுராமையா—தொழில் நுட்ப வளர்ச்சி, வினியோ

கம், சமூகப் பாது காப்பு.

14. திருமதி சுசீலா நய்யார் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு.

15. திரு. ராஜ்பகதூர்—தகவல், ஒலிபரப்பு

16. ,, கே. எல். ராவ்—நீர்ப்பாசனம்

17. ,, ஜகந்நாதராவ்—பார்லிமெண்ட் விவகாரம், செய்தித் தொடர்பு.

18. ,, எஸ்.கே. டே—சுரங்கம், உலோகம்.

❋

துணை மந்திரிகள்
(Deputy Ministers)

1. திரு பி. எஸ். நஸ்கர்—உள்துறை

2. ,, சயாம்தார் மிஸ்ரா—உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு.

3. ,, சாம்நாத்—ரயில்வே

4. ,, ஷா நவாஸ் கான்—தொழிலாளர், வேலை வாய்ப்பு, புனரமைப்பு.

5. ,, பி. சி. சேதி—இரும்பு, எஃகு

6. திருமதி மாரகதம் சந்திரசேகர்—சமூகப்பாதுகாப்பு

7. ,, டி. ஆர். சவான்—தொழிலாளர், வேலை வாய்ப்பு, புனரமைப்பு.

8. ,, பதக் தர்ஷன்—கல்வி

9. ,, பி. எஸ். மூர்த்தி—சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு

10. ,, அன்னு சாஹேப் ஹண்டே — உணவு, விவசாயம்.

11. ,, எல். என். மிஸ்ரா—நிதி, திட்டம்

12. ,, வி. சி. சுக்லா—உள்துறை

13. ,, பி. பகவதி—வீட்டு வசதி

14. திருமதி நந்தினி சத்பதி—தகவல், ஒலிபரப்பு

15. திரு சர்தார் இக்பால் சிங்—பெட்ரோல், ரசாயனம்

16. ,, ஷாபி குரேஷி—வர்த்தகம்

17. திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன்—கல்வி

18. திருமதி ஜஹனரா ஜெய்பால் சிங் — போக்குவரத்து, விமானப் போக்குவரத்து

19. திரு சையத் அஹமத் மேதி — சுரங்கம், உலோகம்.

ஆசிரியர்களின் சேமநல நிதி (Provident Fund) தமிழக அரசின் புதுத்திட்டம்

சென்ற ஆண்டிலிருந்து எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கக்கூடாது என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்ததை அனைவரும் அறிவர். இவ்வாணை தனியார்ப் பள்ளிகளைப் பெரிதும் பாதித்தது; பாதிக்கின்றது. ஆதலின், தனியார்ப் பள்ளிப் பிரதிநிதிகள் சென்ற ஆண்டின் தொடக்கத்தில் முதலமைச்சரைச் சந்தித்து ஆசிரியர் சேமநல நிதியுடன் சேர்த்துக் கட்டபபடும் மேலாண்மையின் பங்குப் பணத்தையும் (Management's Contribution) அரசே கட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அரசு ஒப்புதலளித்து விட்டது. அதன் விளைவாக, உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை 1964-65 ஆம் ஆண்டிலிருந்தும், (உதவி பெறும்) தொடக்க நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை 1965-66ஆம் ஆண்டிலிருந்தும் மேலாண்மையினர் (Managers) ஆசிரியர் சேமநல நிதியுடன் தங்கள் பங்குப் பணத்தைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுவரைக்கும் ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 6 சதவீதம் சேமநல நிதியாகப் பிடிக்கப்பட்டது; அத்துடன், 3 சதவீதம் பணம் மேலாண்மையின் பங்குப் பணமாகச் செலுத்தப்பட்டது. ஆசிரியர் ஒருவர் ஓய்வு பெறும் போது அவர் எவ்வளவு பணம் சேமநல நிதியாகப்பெறுகிறாரோ அத்துடன் அரசினரால் 3 சதவீதம் கூட்டிக் கொடுக்கப்பட்டது. இனி, ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு, சேர்த்து வைத்த சேமநல நிதியுடன் மேலாண்மையின் பங்குப் பணத்தையும், தன்னுடைய பங்குப் பணத்தையும் சேர்த்து அரசு கொடுக்க முன் வந்துள்ளது. (நெருக்கடி நிலை காரணமாகச் சேமநலநிதி 11 சதவீதமாகப் பிடிக்கப்பட்டு வருகிறது. அதிகப் படியான 5 சதவீதத்திற்கு அரசு பங்குப் பணம் செலுத்தாது).

இம்முடிவு தனியார்த் துறைப் பள்ளிகளுக்கு ஒரு நல்ல நிவாரணமாகும். பெருமளவில் நடத்தப்படும் சில உயர்நிலைப் பள்ளிகள் இனிச் சேமநல நிதியுடன் ஆண்டுதோறும் 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரை கட்ட வேண்டிய கட்டாயத்தில் இல்லை.

புதிதாக ஆரம்பப் பள்ளிகளைத் திறப்பது பற்றி அரசாங்க உத்தரவு

Elementary Education—Panchayat Union Council—Opening of new schools—Clarification—Issued.

G. O. Ms. No. 1965, Education and Public Health Department, dated 9th November 1965,

தற்போதுள்ள நடைமுறை உத்தரவுகள்படி (அதாவது கல்வி, பொது சுகாதாரத் துறையின் 11-4-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 790 மற்றும் 31-3-1962 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 744) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டுமானால், அவ்வாறு திறக்கவிருக்கும் இடங்களிலுள்ள மக்கள் தொகை 300-க்குக் குறையாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்கு வேறெந்தப் பள்ளிக்கூடமும் இல்லாமலும் இருக்க வேண்டும். மேற்கண்ட இரு நிபந்தனைகளையும் திருப்தி செய்யாத இடங்களில், புதிதாக ஆரம்பப் பள்ளிகளை, பஞ்சாத்து யூனியன் மன்றங்கள் திறக்க வேண்டுமானால், கல்வித்துறையின் முன் அனுமதியைப் (Prior approval) பெற்றுக்கொள்ள வேண்டும்.

2. இது தவிர, புதிதாகப் பள்ளிகளைத் திறத்தல், மேலும் வகுப்புகளை அதிகரித்தல், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாசாரப்படி, மேலும் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற விஷயங்களைத் தீர்மானிக்க செகண்டரி கல்வி நெறியாளருக்கு (Director of Secondary Education) அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இவை பற்றி செகண்டரி கல்வி நெறியாளர் முடிவு செய்த பின், அந்த முடிவுகளை, மாவட்டக் கல்வி அதிகாரிக்குத் தெரியப்படுத்துவார். அவர் புதிய பள்ளிக்கூடங்கள் அல்லது கூடுதலான வகுப்புகளைத் திறக்க அனுமதி தந்து, சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆசிரியர்களை ஒதுக்குவார்.

3. மேற்கண்டவாறு அதிகாரங்கள் எல்லாம் கல்வித்துறையினரிடமே குவிந்து இருப்பதாகவும், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில், 65 (e) பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு இது விஷயத்தில் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் எடுபட்டுவிட்டன என்றும் அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்துள்ளன.

4. ஆகவே, இனி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், கல்வித்துறையின் முன் அனுமதியின்றியே, புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறக்கலாம் என்று, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, அரசாங்கம் அதிகாரம் அளிக்கிறது. ஆனால்

பள்ளிக்கூடங்களைத் துவக்க இருக்கும் இடங்களில், மக்கள் தொகை, 300-க்குக் குறைவில்லாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்குப் பள்ளிக்கூடங்கள் இல்லாமலும் இருக்க வேண்டும். இதற்குட்பட்டு, பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்ட பின், மூன்று மாதத்திற்குள், கல்வித்துறையின் அனுமதியை, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் பெற்றுவிட வேண்டும். இது தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும், புதிதாகப் பள்ளிக்கூடங்களைத் திறக்க, பஞ்சாயத்து யூனியன் மன்றம், செகண்டரி கல்வி நெறியாளரை (Director of Secondary Education) கலந்தாலோசித்துக் கொள்ள வேண்டும்.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1965ன் சுருக்கம்.)

சென்னை அரசு கல்வி பொதுச் சுகாதார இலாக்கா அரசாணை Ms. No. 1762 கல்வி

தேதி 24—9—'65

சுருக்கம்

பள்ளியாண்டின் இடையிலேயே ஓராசிரியர் (அவர் எந்த வித (Under all managements) மான மேலாண்மையின் கீழ்ப் பணி புரிந்தாலும்) ஓய்வு பெற நேர்ந்தால், அவரை மீண்டும் அதே பள்ளியில், கோடை விடுமுறைக்குப் பள்ளி மூடும் வரை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும்.

கோடை விடுமுறை முடிந்து குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்குப் பிறகும், பள்ளியாண்டின் இடையிலும் அது முடியு முன்பும் ஓய்வு பெறும் ஆசிரியர்களை மட்டும் வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு (Subject to the usual Conditions) மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். (May be reemployed) இது முன்னைய உத்தரவாகும்.

அறிவியல் ஆசிரியர்களும், கணக்கியல் ஆசிரியர்களும் இனி வரும் சில ஆண்டுகள் வரை கிடைப்பது அரிதாய் இருக்குமாதலால், பள்ளியாண்டின் இடையிலேயே ஓய்வு பெற நேரிடும் ஆசிரியர்களின் ஊழியத்தை அதே சம்பளத்தில் தொடர்தல் வேண்டும். இது இப்போதைய உத்தரவாகும்.

இந்தியாவில் அரிசி உற்பத்தி: சுவையான புள்ளி விவரங்கள்.

புது டில்லி, பிப். 5—இந்தியாவில் அரிசி உற்பத்தி, உபயோகம் ஆகியவை பற்றிய ஆராய்வானது உற்பத்தியாளர், உபயோகிப்பாளர், அரசாங்கம் ஆகிய அனைவரும் அக்கறை காட்டக்கூடிய சுவையான தகவல்களைத் தெரிவிக்கின்றது.

உலகிலேயே மிக அதிக அளவில் அரிசி உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. அப்படியிருந்தும் இந்தியா இத் தானியத்தை இறக்குமதி செய்கிறது. உலகிலேயே மிகப்பரவலாக விளைவிக்கப்படும் தானியங்களில் கோதுமை. அடுத்தபடியாக அரிசி இரண்டாவது இடம் வகிக்கிறது. உலகின் ஜனத்தொகையில் பாதிப்பேர் அரிசி சாப்பிடுகின்றனர். இந்தியாவை எடுத்துக் கொண்டாலும் இந்நாட்டில் பாதிப் பேருக்கு அரிசியே பிரதான உணவாக இருக்கிறது.

அரிசி நிலப்பரப்பு

1963-64-ஆம் ஆண்டில் உலகம் பூராவிலும் அரிசி விளைவிக்கப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பு 8,71,12,000 ஹெக்டராகும். அதில் ஆசியாவில் அரிசி விளைவிக்கப் பட்ட நிலப் பரப்பு 7 கோடியே 76 லட்சம் ஹெக்டராகும். அதாவது 89 சத விகிதமாகும். அரிசி உற்பத்தி அளவைப் பொறுத்த வரையில் மேற்படி ஆண்டில் உலகின் மொத்த அரிசி உற்பத்தி 15,43,05,000 மெட்ரிக் டன்களாகும். இதில் 13,51,56,000 மெட்ரிக் டன்-அதாவது 88 சத விகிதம்-ஆசியாவில் விளைந்தது. எனினும் மேற்படி புள்ளி விவரத்தில் சீனாவின் அரிசி உற்பத்தி சேர்க்கப்படவில்லை. 1963ல் சீனாவின் அரிசி உற்பத்தி 7 கோடியே 84 லட்சம் மெட்ரிக் டன்னாக மதிப்பிடப்பட்டது. உலகில் அரிசி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த படியாக இந்தியா உள்ளது.

இந்தியாவில் பன்னெடுங்காலமாக அரிசி விளைவிக்கப்பட்டு வருகிறது. இன்று இந்தியாவில் மற்ற எந்தப் பயிரையும் விட அரிசிதான் அதிக நிலப்பரப்பில் விளைவிக்கப்படுகிறது. அதாவது அரிசி விளைவிக்கப்படும் நிலப்பரப்பு, மொத்த விளை நிலப்பரப்பில் 21 சத விகிதமாகவும் மொத்த உணவு தானிய சாகுபடி நிலப்பரப்பில் 30 சத விகிதமாகவும், பிரதான உணவு தானிய நிலப்பரப்பில் 39 சத விகிதமாகவும் உள்ளது. அமைப்பு, ரகம் ஆகியவற்றில் பெரிதும் மாறுபட்ட 5,000 முதல் 6,000

வகை அரிசி ரகங்கள் இந்நாட்டில் விளைவிக்கப்படுகின்றன.

உற்பத்தி

1963–64ம் ஆண்டில் இந்தியாவின் அரிசி உற்பத்தி 3 கோடியே 64 லட்சம் 89 ஆயிரம் மெட்ரிக் டன்னுக இருந்தது. இதில் மேற்கு வங்கத்தின் உற்பத்தி 52 லட்சத்து 47 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும், பீகாரின் உற்பத்தி 44 லட்சத்து 62 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும், ஒரிஸ்ஸாவின் உற்பத்தி 42 லட்சத்து 38 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும் இருந்தது. கேரளாவின் உற்பத்தி 11 லட்சத்து 2 ஆயிரம் டன்னுகவும், குஜராத்தில் உற்பத்தி 4 லட்சத்து 77 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும் இருந்தது, 5 லட்சத்து 41 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தியைக் கொண்ட பஞ்சாப் மேற்படி பட்டியலில் கடைசியாக இருந்தது

உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டிலிருந்தான இறக்குமதி ஆகிய இரண்டையும் சேர்த்து இந்தியாவின் மக்கள் உபயோகத்துக்குக் கிடைத்த அரிசியின் அளவு 1950ல் 2 கோடியே 32 லட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும் 1962-ல் 3 கோடியே 22 லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன்னுகவும் இருந்தது.

அமெரிக்கா, பர்மா, தாய்லாந்து, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்துதான் இந்தியா பிரதானமாக அரிசி இறக்குமதி செய்கிறது. 1948ல் 8 லட்சத்து 81 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருக்க, 1963–64ல் இது 4 லட்சத்து 44 ஆயிரம் மெட்ரிக் டன்னுகக் குறைந்தது. மொத்த தானிய இறக்குமதியில் அரிசியின் பங்கு 1948-ல் 30. 5 சத விகிதமாக இருந்திருக்க, 1963-64ல் அது 13 சத விகிதமாகவே இருந்தது.

விளைச்சல் விகிதம்

விளைச்சல் விகிதத்தில் அரிசி உற்பத்தி செய்யும் மற்ற நாடுகளை விட இந்தியா பின்தங்கியுள்ளது. இந்தியாவில் சராசரியாக ஒரு ஹெக்டாரில் விளையும் அரிசியின் அளவு 100 கிலோ கிராமாகும். இது உலக சராசரி விளைச்சல் விகிதத்தில் 87 சத விகிதமேயாகும். தவிர இது ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் விளைச்சல் விகிதத்தில் மூன்றில் ஒரு பங்கேயாகும்.

எனினும் கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் விளைச்சல் விகிதம் உயர்ந்துள்ளது. 1957-58ல் ஒரு ஹெக்டாருக்கு 790 கிலோகிராமாக இருந்த விளைச்சல் விகிதம் 1964-65-ல் 1090 கிராமாக உயர்ந்தது. இந்திய விதைகள், நல்ல பாசன வசதி, இயற்கை உரம், திருந்திய விவசாய முறை ஆகியவற்றால் இது சாதிக்கப்பட்டது. ஆனால் ரசாயன உரப் பற்றாக்குறை இல்லாமலிருந்தால் விளைச்சல் விகிதம் மேலும் உயர்ந்திருக்கும்.

உரம்

இந்தியாவில் நெல் வயல்களுக்கு ரசாயன உரங்களை உபயோகிப்பதான, மற்ற நாடுகளை விட மிகக் குறைவாக உள்ளது.

இதில் இந்தியாவின் உர உபயோகம் உலக சராசரியில் பத்தில் ஒரு பங்காகவும். ஜப்பானில் உள்ளதில் நூற்றில் ஒரு பங்காகவும் உள்ளது.

இந்தியாவிலேயே விளைச்சல் விகிதம் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு விகிதமாக அதிக வித்தியாசம் கொண்டதாக உள்ளது. உதாரணமாகச் சொல்வதானால் இதுகேரளாவில் ஒரு ஹெக்டாருக்கு 1,509 கிலோ கிராமாகவும், மேற்கு வங்கத்தில் 990 ஆகவும், ஜம்மு-காஷ்மீரில் 1,617 ஆகவும், மகாராஷ்டிராவில் 873 ஆகவும் உள்ளது.

உபயோக விகிதம்

ஒரு மதிப்பீட்டின்படி பல்வேறு ராஜ்யங்களிலும் விவசாயக் குடும்பங்களில் நபர் வாரியான மொத்த தானிய உபயோகம் நாள் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு உள்ளது: உத்தரப் பிரதேசம்: 0.55 சேர்; ராஜஸ்தான் 0.73 சேர்; அஸ்ஸாம்: 0.66 சேர்; கேரளா: 0.26 சேர்; பஞ்சாப்: 0.59 சேர்.

இவ்வித மொத்த தானிய உபயோகத்தில் அரிசியின் பங்கு மேலும்சுவையானதாக உள்ளது. உத்தரப் பிரதேசத்தில் சராசரியாக ஒருவர் ஒரு நாளில் மொத்தம் 0.55 சேர் தானியம் சாப்பிட்டாலும் 0.1 சேர் அரிசிதான் சாப்பிடுகிறார். பஞ்சாபி ஒருவர் மொத்தத்தில் 0.59 சேர் தானியம் சாப்பிட்ட போதிலும் அதில் அரிசியின் அளவு 00·2 சேர் தான். ராஜஸ்தானில் அரிசி உபயோகம் மிகவும் குறைவு. மத்திய பிரதேசத்தில் நபர் வாரி மொத்த தானிய உபயோகம் 0.64 சேர் ஆக இருக்க அதில் அரிசியின் அளவு 0.26 சேர் தான்.

இன்று அரிசி பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக உள்ள கேரளாவில் நபர்வாரி மொத்த தானிய உபயோகம் 0·26 சேராகும். அதில் அரிசியின் பங்கு 0.22 சேராகும்.

—தினமணி

41ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆசிரியர் சங்க காரியதரிசி திரு. லட். சுமணன் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையில், வேலூர் ரேஞ்சில், பள்ளிப்படிப்பு வயது குழந்தைகளில் 99 சத விகிதம் பேர் பள்ளிகளில் படித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

ஜில்லா கலெக்டர் திரு.வெங்கட்ராமன் பள்ளி அபிவிருத்தி மகாநாட்டைத் துவக்கி வைத்தார். கோவை டிவிஷனல் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் திரு. வெங்கட சுப்பிரமணியம் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

மொத்த பெண்களில் 20 சத விகிதம் பேர்தான் செகண்டரி பள்ளிகளில் சேர்ந்திருப்பதாகவும், சிறுவர்களிலும் 76 சத விகிதம் பேர் சேர்ந்திருப்பதாகவும் திரு. டைட்டஸ் சொன்னார். 4வது திட்டத்தின் போது இந்த நிலைமையைத் திருத்தியாக வேண்டும் என்றார்.

ஆரம்பப் பள்ளி மாணவர் 18 லட்சம் பேருக்கு இலவசமாக பலகை, புத்தகம்

வேலூர் பள்ளி அபிவிருத்தி மகாநாட்டில் செகண்டரி கல்வி டைரக்டர் தகவல்

வேலூர் மார்ச், 6—கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டி, கல்வி இலாகா டைரக்டர் காரியாலயப் பிரிவை திறமையான வகையில் திருத்தி யமைக்க நடவடிக்கை எடுப்பது பற்றி சர்க்கார் தீவிரமாக யோசித்து வருவதாய் செகண்டரி கல்வித் துறை டைரக்டர் திரு. டைட்டஸ் இன்று வேலூரில் தெரிவித்தார்.

வேலூரில் பள்ளி அபிவிருத்தி மகாநாட்டுக்குத் தலைமை வகித்து அவர் பேசினார்.

பள்ளி அபிவிருத்தி சம்பந்தப் பட்ட விஷயங்களில் முடிவு எடுக்க, ஜில்லா அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குவது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

திரு. டைட்டஸ் மேலும் கூறியதாவது :—

செகண்டரி பள்ளிகளில் தற்போது 5.5 லட்சம் பேர் படித்து வருகின்றனர். இதை இரு மடங்காக்க சர்க்கார் உத்தேசித்து வருகிறது. இதற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்படும்.

4வது திட்டத்தின் போது 1200 செகண்டரி பள்ளிகளுக்கு விஞ்ஞானக் கருவி வசதிகள் செய்து தரப்படும். செகண்டரி பள்ளிப் படிப்புவயதிலுள்ள சிறுவர்களில் குறைந்த பட்ச 60 சதவிகிதம் பேராவது 1971-ஆம் வருஷ முடிவுக்குள் செகண்டரி பள்ளிகளில் படித்து வர வேண்டும் என்பதில் சர்க்கார் ஆர்வம் கொண்டிருக்கிறது.

கிராமங்களில் ஆசிரியர்களுக்காக 3800 ஜாகைகள் கட்டித் தரப்படும்.

இன்னும் சில மாதங்களில் ஆரம்பப் பள்ளிகளிலுள்ள சுமார் 18 லட்சம் பேருக்கு இலவசமாகப் பலகைகளும் புத்தகங்களும் தரப்படும்.

ராஜ்ய சமூக நல போர்டு தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் வைத்திய வண்டி வசதியைத் துவக்கி வைத்துப் பேசினார். ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்தால், அற்புதமான சாதனைகளைக் காணலாம் என்றார். எல்லாப் பள்ளிகளிலும் பெற்றோர், ஆசிரியர் சங்கங்கள் அமைக்கவேண்டும் என்றார்.

திருமதி. வரதப்பன் இலவச சீருடை விநியோகத்தையும் துவக்கிவைத்தார். 12 பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களையும் துவக்கி வைத்தார்.

ரூ. 58,000 பெறுமானமுள்ள பள்ளி அபிவிருத்தி உபகரணங்களும், இலவச சீருடையும் விநியோகிக்கப்படுவதாக ஜில்லா கல்வி அதிகாரி திரு. வெங்கடாசல பெருமாள் தெரிவித்தார்.

40ஆம் பக்கம் பார்க்க

கல்வித் துறைப் பணிகள்

ராஜ்ய அசெம்பளியில் கல்வி மானியம் நிறைவேறிவிட்டது. இதுதான் பெரிய செலவினம். 66-67-ல் பொதுக் கல்விக்கு ஒதுக்கியிருப்பது சுமார் ரூ. 43 கோடி. இவ்வாண்டில் செலவு செய்ததைவிட இது 8 கோடி அதிகம். எல்லாக் கட்டங்களிலும் கல்வியை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்திருப்பது நல்ல செய்தி. 6 முதல் 11 வயதினரில் இன்னும் 8 லட்சம் பேர் பள்ளிக்கு வரவேண்டியிருக்கிறது. தவிர மேல் வகுப்புகளிலும், காலேஜுகளிலும், தொழில் கல்லூரிகளிலும் அதிகமான பேரைச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பது போற்றுதற்குரியது. ஏழு புதிய கல்லூரிகளைத் திறக்கப் போகிறார்கள். மாலை நேரக் கல்லூரிகள் விரிவு காணவிருக்கின்றன. அவற்றில் கணித, விஞ்ஞான போதனையும் நடைபெறும். மேலும் அதிக மாணவர்கள் எஞ்சினீரிங் காலேஜுகளில் சேருவர். நமது தொன்மையான நூல்களிலுள்ள விஞ்ஞானத் தகவல்கள் ஆராய்ச்சியாளருக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, கிண்டி காலேஜில், வகுப்பு நேரம் கழிந்தபின், ஸம்ஸ்கிருத நூல்களிலுள்ள அறிவியற் பகுதிகளை அறிமுகப்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். பல்தொழிற் பள்ளிகள் கூடுதலாகும். இவையெல்லாம் வரவேற்கத்தக்கவையே.

எல்லா வகுப்புகளிலும் படிக்க வருகிறவர்களின் எண்ணிக்கை பெருகி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால் போதனையின் தரத்தை, எல்லா நிலைகளிலும், ஒருசேர உயர்த்துவதற்கு முழு முயற்சி செய்தாக வேண்டும். ஆரம்ப பாடசாலைகளுக்குப் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களைத் தலைமை உபாத்தியாயர்களாக நியமிக்கும் திட்டம் ஒன்று இருப்பதாக அமைச்சர் கூறினார். இது அடையாளபூர்வமாக இங்குமங்கும் நடந்தால் போதாது. ஏற்கெனவே பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கட்டாய மறு பயிற்சியளித்து, அவர்களுடைய தகுதியை உயர்த்தவேண்டும். செகண்டரி கல்வி போதனைக்கு கூடிய வரை பட்டதாரிகள் தவிர மற்றவர்களை நியமிப்பதில்லை என்பதைக் கொள்கையாகக் கொள்வதும் பரிசீலனைக்கு உரியது. ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் தேக திடமுள்ளவர்களை பெரிய அளவில் மறுபடியும் வேலைக்கு அமர்த்திக்கொண்டு, இன்னும் சில ஆண்டுகளின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அதற்குள் போதிய புதிய பட்டதாரிகளுக்குப் பயிற்சி கிடைக்கச் செய்யலாம்.

எல்லாக் கட்டங்களிலும் மாணவர்கள் படிப்பில் போதிய கவனம் செலுத்தும்படி செய்வது மிக மிக அவசியம். கல்வி இலவசமாகி விட்டதால், படிப்பு விஷயத்தில் யாருக்குமே பொறுப்பில்லை. கேள்வி முறை இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு

வருகிறது. இதன் விளைவாக, வீடுகளில் படிக்கும் பழக்கமே நின்று விடும் போலிருக்கிறது. இதனால் அறிவு வளர்ச்சி ஏற்படு வதில்லை. பல மாணவர்கள் தேறு வதில்லை; தேக்கமும் ஒழுங்கீன மும் பள்ளிகளில் கைகோத்துச் செல்வதைக் காண்கிறோம். இந் தப் போக்கு மாற வேண்டுமா யின் எதைச் செய்தாவது, மாண வர்களைப் படிக்க வைக்க வேண் டும். அடிக்கடி மாணவர்களின் வளர்ச்சியை மதிப்பிடுகின்ற தேர்வுகளை நடத்துவது அவசிய மாயின், அதற்கு வழி வகை செய்தாகவேண்டும். பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு, வகுப்பு நேரம் முடிந்த பிறகும், சனி, ஞாயிறுகளிலும் பள்ளிக் கூடங்களிலேயே தனிப் பயிற்சி தரலாம். அதற்காக ஆசிரியர்க ளுக்குக் கூடுதலான ஊதியம் தருவதற்கு அரசாங்கம் தயாராக வேண்டும். பெற்றோர்களின் ஒத் துழைப்பு இதற்குத் தேவை. எண்ணிக்கை மிகுதியுடன் கூட படிப்பதன் தரம் ஓரளவாவது காப்பாற்றப்பட வேண்டுமாயின், இந்த ரீதியில் உழைப்பது தவிர்க்க முடியாத பொறுப்பா கிறது.

தகுதி உயர்வுடன்கூட நெருங் கிய சம்பந்தமுள்ள மற்றொரு பிரச்னை பள்ளிக்கூடங்களின் நிர் வாகங்களைப் பற்றியது. தனிப் பட்ட நிர்வாகங்கள் தொடர்ந்து நற்பணியாற்றுவதற்கான எல்லா உதவிகளையும் சர்க்கார் செய்து தானாக வேண்டும். சம்பள வசூல் நின்றுவிட்டதால் இதற்கு மாற்று வருவாயில்லை. ஆனால் பெரும்பாலானவை போர்டுப் பள்ளிகளும், முனிசிபல் பள்ளி களுந்தான். இவை விரைவில் அரசாங்கப் பள்ளிகளாகிவிடும். ஓய்வு பெற்ற, மதிப்பும் கடமை யுணர்வுமுள்ள ஆசிரியர்களைக் கொண்ட குழுக்களை, தேவைக் கேற்ப, ஜில்லாவுக்கு ஒன்றி ரண்டு வீதம் நியமித்து, அவற் றின் சிறப்பான நிர்வாகத்தை உறுதிப் படுத்தலாமெனத் தோன்றுகிறது.

கிராமங்களில் ஏற்பட்டுள்ள ஹைஸ்கூல்களின் தர உயர்வில் விசேஷ கவனம் செலுத்தியாக வேண்டும். நான்கைந்து பள்ளிக் கூடங்களுக்கு ஒன்று என்ற ரீதி யில் விஞ்ஞான சோதனைக் கூடங்கள் நல்ல முறையில் ஏற் பட்டுப் பணியாற்ற வேண்டும். அவற்றில் படிக்கிறவர்களிடம், தமக்கு இரண்டாந்தர போதனை தான் கிடைக்கிறது என்று தாழ்மையுணர்ச்சி இனியும் நீடிக்கும்படி விடலாகாது. எல் லாப் பள்ளிக் கூடங்களிலுமே கடைசி மூன்று படிவங்களில் ஆங்கிலத்தைத் திறம்படப் பயின்று, புரிந்துகொண்டு படிக் கவும், எழுதவும், பேசவும் வேண் டிய தகுதிகளை முக்கியமாக வளர்க்கவேண்டும். உயர் படிப்பை நாடுவோருக்கு கணித, விஞ் ஞான போதனை தரமாக அமை யச் செய்வதும் மற்றொரு முக்கி

46ஆம் பக்கம் பார்க்க

உபவாசமிருப்பது ஆரோக்கிய வழியாகுமா?

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

உபவாசம் என்பது கடவுளை வணங்கி, அவருடைய நினைவே உள்ளத்தில் இருக்கும்படிச் செய்யும் நோக்கத்துடன் உண்ணு திருத்தலாகும். உபவாசம் என்பது வடமொழிச் சொல். பட்டினி தமிழ்ச் சொல். இரண்டிற்கும் வித்தியாசம் இல்லை என்று சிலர் கருதக் கூடும். ஆனால் சாதாரணமாக ஏதாவது நல்ல நோக்கத்துக்காக உணவு கொள்ளாமலிருந்தால் அதை உபவாசம் என்றும், உணவு கிடைக்காத காரணத்தால் உண்ணுமலிருத்தலை பட்டினி என்றும் சொல்கிறோம்.

பசி என்ற நோய்க்கு உணவு மருந்தாகும். வேதங்களில் உணவை மருந்து என்று சொல்லப் பட்டிருக்கிறது. மருந்து அருந்துவதில் அளவு இருப்பதுபோல், உணவைச்சாப்பிடுவதிலும்அளவு உண்டு.

உபவாசம் பல அளவில் செய்து கொள்ளலாம். சிலர் ஒரு நாள் முழுவதும் உணவை அருந்தாமலே இருந்து விடுவார்கள். தண்ணீர் கூடக் குடிக்கமாட்டார்கள். சிலர் உப்புப் பண்டங்களை உண்ணமாட்டார்கள். இன்னும் சிலர் ஒரு வேளை மட்டும் உணவு அருந்திவிட்டுச் சும்மா இருந்துவிடுவார்கள். இவ்வாறு உபவாசமிருப்பதால் அவர்களுடைய உள்ளம் புலன் விஷயங்களில் திரும்பாமல், கடவுளையே நினைத்துத் துதி செய்ய வெகுவாக இணங்கும் என்று கருதப் படுகிறது.

வைத்திய முறையில் இதற்கு ஓர் அளவு ஆதாரம் இருக்கிறது. கடவுளை சிந்தித்து துதி செய்வதைப் பற்றி வைத்தியருக்கு ஒன்றும் சொல்ல இயலாது. ஆனால் கடவுளை நம்பி, அவரிடம் உள்ளத்தைத் திருப்பிக் கொள்வதால் உள்ளம் அமைதி அடையும் என்பதை வைத்தியம் ஒப்புக் கொண்டே தீரும். அமைதியும் நம்பிக்கையும் ஆரோக்கியத்தைக் காக்க கூடிய உபாயங்களாகும். வைத்தியர்கள் ஆராய வேண்டியது, உபவாசத்தால் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியம் உண்டாகுமா என்பதாகும். ஓர் அளவு உபவாசமிருப்பதால் உடல் நலம் திருந்தம் அடையுமே அன்றி, ஆரோக்கியம் குறையாது. உடல் நலம் திருந்துவதால், உள்ளமும் இயல்பான அமைதி நிலை அடையும்.

வேதங்கள் உணவை ஔடதமெனக் கருதுவதாய்ச் சொன்னோம். மருந்தை அதிகம் கொடுத்தால் நோய்க்கு இடங்கொடுப்பது போலாகும். இது போலவே, அதிகப்படி உணவை அருந்திக்கொள்வதும் நோய்களை எழுப்பக் காரணமாகும். மேலும், இரை தேடுதலும் சந்ததிப் பெருக்கமுமே வாழ்க்கையின் லட்சியங்களாகா. வேறு வகையிலும் அதனுடைய கருத்து செல்கிறது. அறஞ்செயல், கடவுளை வணங்குதல், மானிட வர்க்கத்தின் நலத்தைக் கோருதல்,

விஞ்ஞான விஷயங்களை அறிதல் என்பன எல்லாம் மனிதனுடைய உள்ளம் கொள்ளும் லட்சியங்களாகும். இரை தேடுதலும் சந்ததிப் பெருக்கமும் மட்டும் மனிதனுடைய லட்சியங்களாய் இருந்தால், உள்ளம் இந்த அளவிற்கு வளர்ந்திருக்கத் தேவையில்லை. ஆனால் மனித உள்ளம் இப்பொழுது பல்வகையில் வளர்ந்திருப்பதோடு, ஆன்மீக விஷயங்களிலும் கருத்துச் செலுத்தி வருகிறது. உயர்தரச் சிந்தனைகளைச் சிந்திப்பதில் மனதைத் திருப்பிக்கொள்வதற்கென உணவு ஊட்டிக்கொள்வதில் அடக்கமும் கட்டுப்பாடும் அனுசரிப்பது தேவையாகிறது.

நாகரிகம் பெற்ற இந்த நாளில் உணவு அருந்தும் பழக்கம் பெரும்பாலும் ஒழுங்குபட்டுவிட்டது. நேரம் தவறாமல் தினமும் மூன்று தடவைக்குக் குறைவில்லாமல் உணவு ஊட்டிக்கொள்கிறோம். உண்மையான பசி என்பதே இக்காலத்து நாகரிகம் பெற்ற மக்களுக்குத் தெரியக் காரணம் இல்லை. பசி தோன்றும் முன்னே உணவு அருந்திக்கொள்ளும் பழக்கம் வந்து விட்டது. ஊரிலே பஞ்சம் வரும் என்று அறிந்தால், உடனேயே அடுத்த ஊரிலிருந்து, அல்லது அயல் நாட்டிலிருந்துகூட உணவு வகை கொண்டு வந்தாய்விடும். ஒவ்வொரு ஊரிலும் திறந்து வைக்கப்பெற்று, உணவு வகை வினியோகம் செய்யப்படுகிறது.

மனிதன் உலகில் தோன்றிய காலத்தில் இதர பிராணிகளை வேட்டையாடிக் கொன்று தின்று, பசியைத் தீர்த்துக்கொண்டான். இதனாலே ஒழுங்காகப் பசியைத் தீர்த்துக்கொள்ள வசதியில்லாமற் போயிற்று. அதனால் சில நாள் சேர்ந்தாற்போல் பசியைப் பொறுத்திருக்க நேர்ந்தது. இந்த இடைக்காலம் எல்லாம் உடல் ஆரோக்கியம் குறையாமல் இருந்திருக்க வேண்டும்; அவ்வாறு தாங்கக் கூடிய ஆற்றல் இன்றும் மனிதனுக்கு இருக்கிறது.

இந்தக் காலத்தில் வீம்பிற்கே இருபது நாட்களுக்கு மேலும் உபவாசமிருந்து, திரும்பவும் ஆரோக்கியம் இயல்பான நிலைக்கு வந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, முன்னிலும் அதிக அளவு எடையும் பெற்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

உபவாசத்தின் போது எங்கிருந்து உடல் போஷாக்குப் பெற்றுக்கொள்கிறது? நாம் உண்ணும் உணவு எல்லாம் எஞ்சினில் விடும் எண்ணெயைப் போல் எரிந்து போகாது. உணவில் ஒரு பகுதி உடலை ஆக்குவதிலும், அழிவைச் சரிகட்டுவதிலும் பயன்படுகிறது. மிகுதியாயுள்ளதில் ஒரு பகுதி வேலை செய்யும் சக்தியாக உபயோகிக்கப்படுகிறது; மற்றொருபகுதி உடலில் பல இடங்களில் அவசரத் தேவைக்கென சேமித்து வைக்கப்படும். இந்தச் சேமிப்பு முக்கியமாக நிணமாகவும், சர்க்கரை போன்ற பொருளாகவும், புரோட்டீனாகவும் காணப்படும். நிணம் உறுப்புக்களைச் சூழ்ந்தும்,

சருமத்தின் அடியிலும் வைத்துக் காக்கப்படும். சர்க்கரைப் பொருள்கள் கல்லீரலிலும் தசைகளிலும் தண்ணீரில் கரையாத ஒரு வகைச் சர்க்கரையாகச் சேமித்து வைக்கப்படும். உபவாசம் அல்லது பட்டினியிருக்கும் காலம் எல்லாம் உடல் இந்தச் சேமிப்பையே உயிர்காக்கப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்தச் சேமிப்பு அழிக்கப் பெற்றதும், உடல் உறுப்புகள் கரையத் தொடங்குவதன் குறிகளை முன்னதாகவே அறிந்து, உபவாசத்தை உடனே நிறுத்திவிட வேண்டும். ஆரோக்கியத்துக்காக உபவாசமிருக்க விரும்புவோருக்கு இத்தகைய எச்சரிக்கை வேண்டியதில்லை. இவர்களுக்கு மாதம் இரண்டு நாள் அல்லது மூன்று நாள் உபவாசமிருந்தால் போதுமானது. இந்த உபவாசம் முழுப் பட்டினியாகவும் இருக்கலாம்; ஒரு வேளை உணவு அருந்துவதாகவும் இருக்கலாம். இந்த ஒரு வேளை உணவிலும் உப்புச் சேர்க்காமலே இருந்துவிடுவார்கள் சிலர்.

இத்தகைய உபவாசமானது பேதிக்கு மருந்து கொடுப்பதற்குச் சமானமாகும். ஏனெனில் உபவாசத்திலும் உடலிலிருந்து துர்நீர் பெரும்பாலும் அகற்றப்படும். நமது உடலில் நீரைத் தங்கி நிற்கச் செய்வது உப்பேயாம். உப்பை உணவிலிருந்து குறைத்துக்கொள்ளவோ, அல்லது சிறிதும் சேர்க்காமலோ இருப்பதால், மேலும் உடம்பிலிருந்து துர்நீர் அகற்றப்படும். இதனால் உபவாசத்திற்குப் பிறகு அனேகம் உறுப்புக்களில் புது செல்கள் (உறுப்பணுக்கள்) உற்பத்தியாகும்.

இவ்வாறு உறுப்புக்களிலிருந்து பழைய நீர் அகற்றப் பெற்று, புதிய நீர் வந்து சேருவதால் நமது சுறுசுறுப்பு அதிகமாகும். கண்ணின் பார்வை முன்னிலும் தெளிவாகும். செவியும் தெளிவாகவே கேட்கும். வேறு புலன்களும் சுறுசுறுப்புப் பெற்று, வேலை செய்யும்.

இத்தகைய உபவாசங்களை முதியோர்கள், அதாவது நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் அனுசரிப்பது ஆரோக்கியத்தைக் காக்க இன்றியமையாததாகும். அது இரத்தக் கொதிப்பைத் தடை செய்யும். நாற்பது வயதிற்குப் பிறகு உணவின் அளவைக் குறைத்துக் கொள்வது நலமாகும்.

நல்வழி.

43ஆம் பக்கத் தொடர்ச்சி

யமான பணி. இதிலும் விசேஷ கவனம் செலுத்தப் படுவது நல்லது.

பத்து பைசாவில் சத்துள்ள மதியவுணவை பள்ளிப் பிள்ளைகளுக்குத் தரலாம் என்று நிபுணர்கள் கூறுவதாக மந்திரி தெரிவித்தார். இந்த அற்புதத்தை நடைமுறையில் அவர்கள் செய்து காட்டுவார்களாயின் சமூகம் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கும்.

—“ தினமணி ”

சரித்திரத்திற்கு முந்திய பிராணிகள் அழிந்தது எப்படி?

மூளைக்கும் இருதயத்திற்குமிடையே அதிக இடைவெளி காரணமாம்!

(ரிச்சர்டு வில்ம்)

சரித்திரத்திற்கு முந்தியகாலப் பிராணிகள் சந்ததிகளே இல்லாமல் அடியோடு அழிந்து போனது ஏன் என்பதற்குப் பல ஆராய்ச்சியாளர்கள் பல காரணங்களைக் கூறுகிறார்கள். ஆனால் கனடாவில் ஆராய்ச்சி செய்து வரும் ஜெர்மன் நிபுணர் ஒருவர் இவைகள் அழிந்ததற்கான சரியான காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். மூளைக்கும் இருதயத்திற்கும் அதிக தூரம் இல்லை என்றால் அப்பிராணிகளின் சந்ததி இன்றும் இருந்திருக்கும். சிலதிமிங்கிலங்கள் அப்படியிருந்ததினால்தான் அவைகளின் சந்ததி இன்னும் இருந்து வருகிறது. இப்படி இல்லாத பிராணிகள் அடியோடு அழிந்து விட்டன.

ஹம்பர்க் (டாட்)-சரித்திர காலத்திற்கு முன்பு பிரம்மாண்டமான உருவமுள்ள பல பிராணிகள் இவ்வுலகில் வசித்து வந்தன. அவைகளின் சந்ததிகள் இன்று இல்லை. அவைகள் அக்காலத்தில் இருந்தனவென்பதற்கு அடையாளமாக அவைகளின் எலும்புகள் சில இடங்களில் கிடைத்துள்ளன. இவை ஏன் அழிந்தன? சிறுகச்சிறுக, காலப் போக்கில் அழிந்தனவா? அல்லது ஒரேசமயத்தில் மாண்டு மறைந்தனவா? இவைகளெல்லாம் ஆராய்ச்சிக்குரிய விஷயம். இவை சம்பந்தமாக இப்போது ஆராய்ச்சியாளர்கள் பலவிதக் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

அப்பிராணிகளின் மூளைக்கும் இருதயத்திற்குமுள்ள தூரம் மிகவும் அதிகமாக இருந்தது என்றும் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்களில் இவ்வளவு தூரம் உறுப்புகளிடையே இருப்பது சரிப்பட்டு வராததால் இப்பிராணிகள் மாண்டு மடிய நேர்ந்திருக்கவேண்டும் என்றும் பேராசிரியர் எச். இ. கெய்சர் கருதுகிறார்.

சீதோஷ்ணநிலை அவ்வப்போது மாறிவிட்டது காரணமாக இவைகள் அழியவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றும் மற்றும்சில பிராணிநூல் வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

சீதோஷ்ண நிலை ஒரேயடியாக மாறுபட்டிருக்காது என்றும் ஒரேகாலத்தில் இப்பிராணிகள் எல்லாம் மறைந்துவிட்டிருப்ப தால் அதன் அழிவுக்கு வேறு காரணங்களும் இருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். அப்போது ஏதாவது வியாதி கண்டிருக்கலாம் என்றாலோ அவ் வியாதி உலகிலுள்ள அவ்வளவு பிராணிகளையும் பாதிக்கும்படி யாக போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் எப்படிப் பரவி யிருக்கமுடியும் என்ற சந்தேகத் தையும் கிளறுகிறார்கள்.

இப்பிராணிகளின் உருவம் ராக்ஷஸ அளவில் இருந்தது காரணமாக இவை நசிக்கும் படியான நிலை ஏற்பட்டதென்று ஒரு சாரார் கூறுகின்றனர். இது ஒப்புக்கொள்ளும்படியாகவும் இருக்கிறது. ஆனால் இக்காலத் தில் மிகப்பெரிய உருவமுள்ள பிராணிகள் ஜீவிக்க வில்லையா என்று இதை ஒப்புக்கொள்ளா தவர்கள் கூறுகிறார்கள்.

மிகப்பெரிய உருவம் காரண மாகவே சரித்திர முற்கால பிராணிகள் அழிந்திருக்கவேண் டும் என்ற கருத்தை கனடாவில் இப்போது ஆராய்ச்சிகளில் ஈடு பட்டிருக்கும் ஜெர்மன் ஆராய்ச்சி யாளர் திரு. கெய்ஸர் ஒப்புக் கொள்கிறார். இருந்தாலும் உறுப்புகள் அமைப்பு சரிவர இல்லாததே அவைகள் அழியக் காரணமாக இருந்திருக்கவேண் டும் என்பது இவருடைய இறுதி முடிவு.

இவர் இப்போது மிகப்பெரிய அளவிலுள்ள பிராணி திமிங் கிலத்தைக் குறிப்பிட்டுக் கூறுவ தாவது: திமிங்கிலத்தில் தலை மட்டும் உடம்பு பாகத்தில் மூன்றில் ஒருபங்கு. இம்மாதிரி இருக்கும் பிராணிகளின் சந்ததிகள் மட்டுமே இன்று உயிருடனிருக்க முடிகிறது. அதா வது மூளையும் இருதயமும் கூடு மானவரை அருகருகே இருக்க வேண்டும். சரித்திர முற்கால பிராணிகளின் உடலுறுப்புகள் இம்மாதிரி அமையாததால் அவை களின் சந்ததிகள் இன்று இல்லை. இப்போது காணப்படாத சில திமிங்கில வகைகளின் எலும்பு களை ஆராய்ந்தால் அதன் மூளை இருதயத்திலிருந்து வெகுதூரம் இருந்திருப்பது தெரியவருகிறது. அத்துடன் அவைகளின் உடல் ஆகிருதிக்கு ஏற்ற தலை இல்லா மல் மிகச்சிறிய தலை அவை களுக்கு இருந்திருக்கிறது.

(யூ. பி எஸ்.)

மாணவர்களும் கண் பாதுகாப்பும்

டாக்டர் ஏ. வி. ராஜகோபால்

ஜீவ ராசிகள் அனைத்திற்கும் வாழ்க்கைக்கு முக்கியமானது உணர்ச்சி; உணர்ச்சி என்பது பல வகைப்படும். கண்களால் பார்க்கும் உணர்ச்சி, காதுகளால் கேட்கும் உணர்ச்சி, மூக்கின் மூலம் முகரும் உணர்ச்சி, நாக்கினால் ருசிக்கும் உணர்ச்சி, தசையின் உணர்ச்சி இவற்றை ஐம் புலன்கள் என்று கூறுவார்கள்.

இவ்வுணர்ச்சிகள் எல்லாம் மனிதனுக்கு மிகவும் உன்னிப்பாக விருத்தி அடைந்துள்ளன. இவ்வுணர்ச்சிகள் ஒன்றுக் கொன்று உதவியாகவும், ஒன்று கூடியும், தனிப்படையாகவும் இருந்து தினசரி வாழ்க்கையை அனுகூலமாக்குகின்றன. இவைகளில் ஒருமிக்க ஒத்துழைப்பின்றி மனிதன் எச் செயலையும் செய்ய இயலாது. ஆகவே இவ்வைந்து புலன்களில் ஏதேனும் ஒன்று இல்லாமலோ, அல்லது விருத்தி குறைவாகவோ இருந்தால், மனிதன் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் மற்ற நான்கு புலன்களும் ஒன்றின் குறைவிற்காக ஈடுகட்டி, அதிகம் உன்னிப்படைந்து கூடியவரையில் வாழ்க்கையைக் குறையின்றி நடத்த உதவுகின்றன. இம்மாதிரி புலன் குறைவாக அதாவது ஒரு அங்கம் ஊனமாக, இருப்பவர்களின் நலத்திற்காக, மேல்நாடுகளிலும், நமது நாட்டிலும் ஆராய்ச்சி செய்து, எந்தெந்த விதங்களில் இவர்களுக்கு ஒத்தாசை செய்ய இயலுமோ அந்தந்த விதங்களில் வாழ்க்கைக்கு அனுகூலமாக சாதனங்கள் செய்து உதவுகிறார்கள். குருடு, செவிடு, ஊமை போன்ற புலன் இழந்தவர்களுக்கு வாழ்வதற்குச் சாதகமாக பல அரிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் குறையை ஓரளவு நீக்கி, சந்தோஷமாகப் பலர் வாழ்கிறார்கள்.

இப்போது, இவ்வைம்புலன்களில் ஒன்றும், பிரதானமும், ஆகிய கண்ணைப் பற்றிச் சிறிது கவனிப்போம். "கண்கள்" என்றால், காண்பது அல்லது பார்வை என்று தான் நமக்குப் பொருள்படும். பார்வை என்றால் என்ன? கண்கள் முன்பு காணப்படுவதெல்லாம் பார்வையா அல்லது பார்த்து மனதில் பதிவு அடைவதுதான் பார்வையா?— உதாரணமாக, ஒரு நாள் முழுவதும் நாம் விழித்திருக்கும் நேரங்களில் நம் கண்கள் முன் எவ்வளவோ தென்படுகின்றன. ஆனால் நினைத்துப் பார்த்தால் சில தோற்றங்களே நம் நினைவில் இருக்கின்றன. மற்றவை மறந்து விடுகின்றன. அதாவது நினைவில்

பதிவு படுவதில்லை. கண்கள் முன் தென்படும் அனைத்தும் கண்களின் பின்பாகத்தில் இருக்கும் "ரெடினு" என்ற திரையில் பதிவாகின்றன. இங்கிருந்து பதிவு பட்ட பிம்பம் கண் நரம்புகளின் மூலம் மூளைக்குச் செல்லுகிறது. இது முதலில் மூளையில் இருக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்தில் அசைப்பட்டு, அர்த்த உணர்ச்சியாக மாறி பதிவுபடும் இடத்தைத் தாக்கி, பிறகு நமக்கு 'பார்வை' என்று சொல்லப்படும் தோற்றத்தை அளிக்கிறது. மூளையில் இருக்கும் இவ்விசேஷ இடங்கள் குழந்தை பிறந்த தினத்திலிருந்தே விருத்தி அடைந்து கொண்டு வருகிறது. ஆகவே கண்கள் முன் தென்படுவனவெல்லாம் நரம்புக் கட்டுகளின்மூலம் மூளைக்குச் சென்று பதிவுபட்டாலும், வேண்டியவை மட்டுமே பார்வையாக வெளிப்படுகின்றன. மற்றவை பதிவு படாமல் திரும்புகின்றன. இவை நமக்குத் தெரிவதில்லை.

உதாரணமாக நாம் ஒருவரை சந்திக்கிறோம். "அடே! உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே" என்கிறோம். இது நம் மூளையில் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்திலிருந்து சரியாக ஒப்பிட முடியாததால் ஏற்பட்ட சந்தேக விளைவு. "அன்று கல்யாணத்தில் சந்தித்தோமோ" என்று அவர் ஞாபகப்படுத்தினால், சந்தேகம் தீர்ந்து, பார்த்தவர் யார் என்று தெரிகிறது. அதாவது, மூளையின் தூண்டுகோலாக பார்வையும், பார்வையின் தூண்டுகோலாக மூளையும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டுள்ளது. இப் பரஸ்பர ஒத்துழைப்பினால் ஏற்படும் பார்வை அனுபவம் விருத்தியடைந்து கொண்டே இருக்கும். அறிவும், கேள்வி ஞானமும் இவ்விருத்திக்கு உதவியாக இருக்கின்றன. அடுத்ததாக, கண்களைக் 'காப்பது' பற்றி, சற்று கவனிப்போம். ஒவ்வொருவருக்கும், கண்கள் எவ்வளவு முக்கியமானவை என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். சிரசில் பிரதானம் நேத்திரம். நம் கண்களைக் காப்பது நம் முக்கிய கடமை. இயற்கையே கண்களைப் பாதுகாக்க உறுப்புகளைசிருஷ்டித்திருக்கிறது. இரு விழிகளும், Eye Sockets என்று கூறப்படும். கண் குழிகள், அதிர்ச்சி ஏதும் ஏற்படா வண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. இக் குழிகள், முக எலும்பினாலாகியவை. கண்களுக்கு முதலாவதானதும், முக்கியமானதுமான இயற்கைப் பாதுகாப்பு—அடுத்தாற்போல இரு இமைகள். 'கண்ணை இரு இமைகள் காப்பது போல" என்று புராணங்களிலேயே உவமானச் சான்றாகக் கூறப்படுகிறது. இவ்விரண்டு இமை மூடிகள், கண்ணுக்கு இன்றியமையாத பாதுகாப்பு அளிக்கிறது. அதிக வெளிச்சம், காற்று, தூசி, இவைகளால் கண் விழிக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படா வண்ணம்

இவைகள் மூடிக் காக்கின்றன. இமைகளின் நுனியில் இருக்கும் வரிசையான மயிர்கள்-இமைக்கு அழகு ஊட்டுவதற்கு மட்டுமல்ல —சிறு பூச்சிகளோ, தூசியோ, உள்ளே அணுகாவண்ணம் வடிகட்டிபோல உதவுகின்றன. இவ்வளவு பாதுகாப்பிற்குப் பாத்திரமான நேத்திரம்—ஐம்புலன்களிலும் மிக உன்னத இடத்தைப் பெற்று விளங்குகிறது. உணர்ச்சி நுட்பம் அபரிமிதமாகக் கொண்ட இந்த அங்கத்திற்கு ஒரு சிறு கீறலோ, அடியோ ஏற்பட்டாலும், கவனிக்காவிட்டால் மிகவும் அபாயமாக முடியும். கண்ணையே இழக்கவும் நேரிடலாம். ஆகையால், இத்தகைய ஒரு அங்கத்தை, எவ்விதம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை, சிறுவர் சிறுமியாக இருக்கும் பொழுதே அறிந்துகொள்வது நலம்.

கண்களில் அடி எதுவும் படாமல் பார்த்துக்கொள்வது முதல் எச்சரிக்கை. தான் அறியாமல் அடி பட்டுக்கொள்வது சகஜம். செடி கொடிகளில் பூ, காய், எடுக்கப் போய், குச்சி இலை குத்தி, கண்களில் அடிபடுவது உண்டு. ஒட்டடை, அடிக்கும் பொழுதும், தும்பு, தூசி தட்டும் பொழுதும் கண்ணில் குப்பை விழுவது உண்டு. இவ்வாறு ஏற்படக்கூடும் விபத்துக்களைத் தவிர்க்கலாம். தவிர்க்க முயல வேண்டும். முன் எச்சரிக்கையுடன் இருப்பது மிகவும் நல்லது. சிறு பிள்ளைகள் விளையாடும் பொழுது, முக்கியமாக கவனிக்க வேண்டியவை சில. கூர்மையான எந்தச் சாமானையும் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்கக் கூடாது. கத்தரி, கத்தி, கூராகச் சீவிய பென்சில் இவை போன்றவை எளிதில் கண்ணில் காயம் ஏற்படுத்தக்கூடும். பள்ளி மாணவர்களிடம் இந்த சாமான்கள் சகஜமாக நடமாடும் சாமான்கள். ஒருவன் பென்சில் சீவும்பொழுது, மற்றொருவன் தட்டிப் பிடுங்குவான்-விளையாட்டாகக் கையை அசக்குவான்—அசக்கின வினை, கண்ணில் குத்திவிடலாம்.

மாணவர்களும் கண் பாதுகாப்பும்

விளையாட்டு மைதானத்தில், கில்லி, அம்பு,வில்லு, காற்றாடி போன்ற விளையாட்டுகளிலும்—கிரிகெட், கால்பந்து போன்ற ஆட்டங்களிலும் கண்ணில்அடிபடுவதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இம்மாதிரி ஆபத்து எதுவும் நேராமல் மாணவர்கள் ஒருவருக்கு ஒருவர் முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆசிரியர்களும் ஓரளவு மாணவர்களுக்கு வருமுன் காப்பை எடுத்துக்கூறி கவனிக்கவேண்டும்.

தீபாவளி சமயத்தில் மாணவர்களின் கொண்டாட்டத்திற்கும் குழந்தைகளின் கோலாகலத்திற்கும் அளவு இல்லை. வெடிகளும் மத்தாப்பூவும், ஆசை தீர வெடிக்கும் சமயம் இது. ஆனாலும், சென்ற 20 வருடங்களாக, முகத்திலும் கண்களிலும் நெருப்பு, வெடி காயங்களுடன் சராசரி 2

அல்லது 3 மாணவர்களாவது வைத்தியத்திற்கு என்னிடம் வந்து இருக்கிறார்கள். கொண்டாட்டத்தில் மெய்மறந்து பயமறியாது போவதுதான் இதற்குக் காரணம்.

இந்த மாதிரி எந்த விபத்து கண்ணுக்கு ஏற்பட்டாலும், உடனே கண்ணைக் கசக்குவது மிகவும் தவறு. கூடிய சீக்கிரம் கண் வைத்தியரிடம் செல்வது தான் நல்லது. கை வைத்தியமாக, படிகாரம் — வெங்காய ரசம், பால், சில பூவின் பால்—என்று பற்பலவற்றைக் கண்களில் ஊற்றுவது ஆபத்தாகமுடியும். இவ் விவரங்களை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, சிறுவர் சிறுமிகளுக்கும், மனதில் பதிய வைக்க வேண்டும்.

அதிக பிரகாசமான வெளிச்சத்தைப் பார்ப்பதால், கண் பார்வை பாதிக்கப்படும். வெல்டிங் என்று சொல்லப்படும் உலோக இணைப்புக்கு அதிக வெளிச்சம் கொண்ட நெருப்பை உபயோகிப்பார்கள். பள்ளி மாணவர்கள், சிறுவர் சிறுமிகள் விளையாட்டாக, வழிக் கடைகளில் இவ் வெளிச்சத்தைக் கண்டவுடன் நின்று வேடிக்கை பார்ப்பார்கள். அந்த வெல்டிங் வெளிச்சம் பார்க்க வாணவேடிக்கை மாதிரி இருக்கும். ஆனால் கண்ணுக்குக் கெடுதல். அதே போல கிரஹணத்தின் வெளிச்சமும் கண்ணுக்குக் கெடுதல்—சிறுவர்கள், விளையாட்டாகவும், வீரத்துடனும், கிரஹணத்தை வெறும் கண்ணில் பார்த்துவிடுகிறார்கள். சில சமயம், இதனால் கண் பார்வையே இழக்க வேண்டி வரும். கிரஹணத்தைப் பார்க்கப் புகை பிடித்த கண்ணாடி உபயோகிப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். புகை பிடித்த பக்கம், கண்ணுக்குஎதிர்ப்புறமாகஇருக்க வேண்டும். ஏனெனில் புகையில் இருக்கும் சிறு கரித்தூள், கிரஹணத்திலிருந்து கிளம்பும் கொடுமையான கிரணங்களை இழுத்துக்கொள்ளும் சக்தி உடையது. கண்ணுக்கு இதமான, வெப்பம் குறைவுள்ள கிரணங்களையே நாம் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டியது, மாணவர்கள் பள்ளியில் நடத்தும், ரசாயன அப்பியாசங்கள். திராவகம், அரிக்கும் குணமுள்ள உப்புகள், இவைகள் சம்பந்தமாக நடத்தும் பயிற்சிகளை, மிக கவனிப்புடன் நடத்த வேண்டும். அஜாக்கிரதையால், திராவகத் துளிகள் கண்களிலும், முகத்திலும் தெளிக்கக்கூடும். கண்ணாடிக் கிண்ணங்கள் சில சமயம் சூடு தாளாமல் வெடித்து விடலாம். கண்ணாடிச் சில்லுகள் முகத்திலும் கண்களிலும் பதியலாம். இம்மாதிரி விபத்துக்களில் முதலுதவி அத்யாவசியம். முக்கியக் குறிப்புக்களாக, முதல் உதவியின் விவரத்தை பெரிய கொட்டை எழுத்துக்களில் எழுதி, ஒவ்வொரு ரசாயன சாலையிலும் எல்லோரும் பார்க்கும் இடத்தில் வைப்பது அவசியம். முதலுதவிக்கான மருந்துகளையும், ஒரு பெட்டியில் வைத்து, உடனே எடுத்து

உபயோகிக்கும் வண்ணம் வைக்க வேண்டும்.

கண் வலி—இதற்கு அடுத்த இடம் பெறும். கண் நோய் சிற் சில மாதங்களில் ஊரில் பரவும். கண் உடனே சிவந்து, தண்ணீரும் அழுக்கும் வடிந்து இமைகள் அதைத்து விளங்கும். கண் வைத்தியரிடம் உடனே காட்டு வது அவசியம். நோய் சரியாகும் வரை பள்ளிக்கூடம் செல்லாமல் இருப்பது நலம். மேலும், தனியே துணி மணிகளும்—முக்கியமாக, கை குட்டையும், டவலும் உபயோகிக்க வேண்டும். கண் வலி தொத்து வியாதி ஆன தால் வீட்டிலும் பள்ளியிலும் மற்றவருக்குத் தொற்றாமல் காப் பது அவசியம்.

மாணவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பார்வை யின் நுட்பம். சில குழந்தை களுக்கு, வகுப்பின் பின் வரிசை யில் உட்கார்ந்தால், கறுப்புப் பல கையில் எழுதும் எழுத்துக்கள் தெளிவு படாது. அவர்களுக்கு அதைப் பற்றி வாத்தியாரிடமோ —பெற்றோரிடமோ கூறத்தெரி யாது. ஆக மொத்தம்—படிப் பில் பின்வாங்கி, கஷ்டப்படு வார்கள். வாத்தியாரும், பெற் றோரும் மாணவனுக்கு புத்தி கூர்மை இல்லை என்று முடிவு கட்டி, படிப்பே வராது என்று கூறுவது இயல்பு. ஆகையால் கரும் பலகையில் எழுத்துக்கள் மங்கித் தெரிந்தாலோ, தெரியா மல் இருந்தாலோ, அடிக்கடி தலை வலி வந்தாலோ, மாணவர்கள் உடனே தங்கள் பெற்றோரிடம் தெரியப்படுத்துவது அவசியம். வாத்தியாரும், கடைசி வரிசை யில் அமரும் ஒவ்வொரு மாணவ மாணவிக்கும், கண் பார்வை சரி யாகத் தெரிகிறதா என்பதை கவனிக்க வேண்டும். பார்வை குறைவாக இருக்கும் சிறுவர் களுக்குக் கண்ணாடி மூலம் பூரண பார்வை கொடுக்கமுடியும். ஆகை யால் இம்மாதிரி குறையை உடனே கவனித்து, வைத்தியரி டம் காட்டி, குறையைத் திருத்து வது அவசியம். தேவையானால் மூக்குக் கண்ணாடி அணிவது நலம். முகத்திற்கு அழகு குறைந்துவிடும் என்று கண்ணாடி அணியாமல் இருந்தால், சிறுவன் வளர வளர கண் பார்வையும் குறைந்துவரும்.

மாணவர்களுக்கு இன்னு மொரு முக்கியமான குறிப்பு—வளரும் பருவத்தில் புஷ்டியுள்ள ஆகாரங்கள் உண்ணுவது அவசி யம். காய்கறிகள், பழங்கள் உண்ணுவது உடல் வளர்ச்சிக்கு முக்கியம்—தற்காலத்தில், சிறு வர்கள், முக்கியமாக மாணவிகள்

நாகரீகக் குறைவு என்றும், அதிகம் பருமனாக வளர்ந்துவிடு வோம் என்றும், ஆகாரத்தை சரி வர உட்கொள்ளாமல் இலை முன் உட்கார்ந்து கொறிக்கிறார்கள். இது உடல் வளர்ச்சிக்குக் கேட்டை விளைவிக்கும். குறைவு வியாதிகள் (Deficiency diseases) எனப்படும் சிற்சில பலவீனங்கள் ஏற்படும். இதனால் கண்ணும் பாதிக்கப்படும். Nightblindness எனப்படும் மாலைக்கண் இவ்வகையைச் சேர்ந்ததே.

படிப்பதற்குக் காற்றோட்டமாகவும், நல்ல வெளிச்சம் உள்ளதாகவும் அறை இருக்கவேண்டும். மாலை வேளையில், மந்தமான வெளிச்சத்தில் படிப்பது கண்ணுக்குக் கெடுதல். அதே போல, படுத்துக்கொண்டும், நடந்து கொண்டும், புத்தகத்தின் மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டும் படிப்பது தவறு. வீட்டிலும், பள்ளியிலும்—எழுதப் படிக்க, நிமிர்ந்து உட்காரவும், சரியான வெளிச்சத்தில் படிக்கவும், பெரியவர்கள், மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். பள்ளியில் இருக்கும் மேசை நாற்காலிகள் சரியான அளவில்—ஸ்டாண்டர்டு அளவில் அமைக்கப்படவேண்டும்.

"கண்" என்ற ஒப்புயர்வற்ற அங்கத்திற்கு, இயற்கை ஏற்படுத்திய பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, சரியான வழியில், முன்ஜாக்கிரதையுடன், இப் பொக்கிஷத்தைக் காப்பது நம் எல்லோருடைய கடமையுமாகும். அப்படி முன் ஜாக்கிரதை வகைகளை மேல் மேலும் அறிந்து கைக்கொண்டால், நம்மை அறியாமல் விளையும் ஆபத்துக்களின் எண்ணிக்கை குறையும்.

—வானொலி

ராஜ்யத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகள்

சென்னை, மார்ச். 4-1965-66-ம் ஆண்டு கணக்குப்படி சென்னை ராஜ்யத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 30, 493 ஆகும். இதில் சர்க்கார் பள்ளிகள் 1,545; பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் பள்ளிகள் 20,222; முனிஸிபல் பள்ளிகள், 1,112; தனியாருக்குச் சொந்தமான பள்ளிகள் 7,614 என்று முதல் மந்திரி திரு. பக்தவத்ஸலம் இன்று அசெம்பிளியில் திரு. கே. சீமைச்சாமியின் கேள்விக்கு பதிலளிக்கையில் கூறினார். திரு முருகையனின் கேள்விக்கு முதல் மந்திரி பதிலளிக்கையில் 1965-66ல் புதிதாக 132 ஹைஸ்கூல்கள் ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை சர்க்கார் மேற்கொள்ளும் உத்தேசம் எதுவும் கிடையாது என்று முதல் மந்திரி மற்றொரு கேள்விக்குப் பதிலளித்தார்.

தமிழர் பண்பாடு

—பேராசிரியர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்-

பண்பாடு என்று பேசுகிறோம். ஆனால் அதன் பொருளை அறிவது அருமை. பண்படுத்திய நிலம் என்று சொல்வது போல பண்பட்ட மனம் என்றும் பண்பட்ட மனிதப் பாங்கு என்றும் பேசலாம். இங்கே உள்ளத்தில் சிறப்பு நிலை தோன்றினாலும் அது மனிதனின் சிறப்பாக இருந்தால் பண்பாடென நாம் பேசுவதில்லை. ஒரு நாட்டின் பண்பாடு, ஓர் இனத்தின் பண்பாடு என்றே பேசி வருகிறோம். இப்படி குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தில் பண்பாடென நாம் பேசுவது அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவருடைய பண்பாடாகவும் தான் வெளிப்பட வேண்டும். இதனாலேதான் மதக் கொள்கையிலும் வேறுபாடு என்று வற்புறுத்த வேண்டும்.

நாகரிகம்

நாகரிகம் உணவிலும் உடையிலும் இது போன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றுவது ஒன்றாகும். நகரத்தின் ஆரவாரந்தானே நாகரிகம்; பண்பாட்டையும் நாகரிகம் என்று சொல்லும் இடமும் உண்டு. "பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டுபவர்" என்ற குறளில் பகைவர் மனமும் நோவாதபடி வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டையன்றோ வள்ளுவர் நாகரிகம் என்கிறார். ஆனால் பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்படையைப்பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவை யுணர்வாகவும், நடை உடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கின்றோம். வாழ்வின் பலபல போக்குகளில் அமைந்த பல வேறு நிலைகளையும் இந்தப்பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்.

'திரிகரணங்கள்' என்று சமய சாத்திரங்கள் பேசும் மனமொழி என்பவற்றின் அமைதியே இங்கே சுட்டப்படுகின்றது. பிறரை முட்டி வருத்தாத நிலையில் இவற்றின் அமைதியைத் தமிழர்கள் மனத்தைப் பற்றிய உண்மை என்றும் உடலைப் பற்றிய மெய்மை என்றும், பேச்சினைப் பற்றிய வாய்மை என்றும் பண்பாட்டு நோக்கத்தில் பேசியதோடு இவை அடிப்படையில் ஒன்றாக விளங்குவதையும் தங்கள் பெரு வழக்கத்தில் சுட்டி வந்தார்கள். முன் கூறியபடியே இவை மக்கள் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும்,

தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும் போதே பண்பாடு எனப் பேசுகிறோம்.

புருஷார்த்தங்கள்

இவை ஓவியம் முதலிய கலைப் பொருள்களாக வடிவெடுத்து நிற்பதும் உண்டு. ஓவியங்களும் சிற்பங்களும் பழைய பண்பாட்டின் நுட்பத்தை நமக்கு விளக்குகின்றன. ஒவ்வொரு மக்கட் கூட்டமும் வாழ்க்கையின் புருஷார்த்தங்களாகப் பலவற்றைக் கொண்டு வாழக் காண்கிறோம். எனவே இவற்றின் வேறுபாட்டாலும் பண்பாட்டின் வேறுபாட்டை நாம் அதில் காணமுடிகிறது. ஒரு வகையில் பண்பாடு நம் மன நிலையைக் குறிப்பதென்றாலும், அங்கேயும் நம் மனப்பாங்கு பல நிலையில் அமையக் காண்கிறோம். கலை முதலியன போன்றவை அகத்து மனத்தே எழுந்து புறத்தே வெளிப்படுவன. ஆதலினால் அவற்றை அகப்புற நிலை எனலாம். இனி அகநிலையாகவே இருக்கின்ற புருஷார்த்தக் கொள்கை முதலியவையும் இங்கே ஆராயத் தக்கவை. எல்லாவற்றிற்கும் அடிப்படையான அகத்துக்கும் அகமான ஆன்மீக வாழ்வு என்ற நிலையும் உண்டு. இதனை அகத்தில் அகம் என்று கூறலாம். இந்தப் பண்பாட்டின் கூறுகளில் உண்மை பேசுவது என்பது போன்றவை எல்லாப் பண்பாடுகளிலும் விளங்கும் பொது நிலை ஆகலாம். வேறு சில கூறுகள் ஒவ்வொரு கூட்டத்திற்கோ நாட்டிற்கோ, சிறப்பாக அமையலாம். ஆன்மீயத்தை வற்புறுத்துவது இந்தியப் பண்பாட்டின் சிறப்பு நிலையாகும்.

2

உண்மையின் விளக்கம்

நம்முடைய இந்தியப் பண்பாடு புறக்கோலத்தின் அழகையும் அமைதியையும் காணும் போதும் அதனோடு அமைந்து விடாது அந்தப் புற நிலைக்கும் அடிப்படையாகத் தோன்றுகிற ஓர் அக நிலை அமைதியை அகக்கண்ணால் காண முயல்கிறது. நம்முடைய கலைகளையெல்லாம் இந்தக் கண் கொண்டு தான் பார்க்க முயல்கிறோம். கூத்தப் பெருமானின் புறக் கோலம் பல கோடுகளின் அமைதியாக விளங்கினாலும், புன்முறுவலும், அழகும், மிடுக்கும் உள்ள வடிவ அழகாகத் தோன்றினாலும் அவற்றை மட்டும் காண்பதோடு நாம் நிற்பதில்லை. அவற்றை எல்லோரும் காணக் கூடும். ஆதலின் அவற்றைப் பற்றி நாம் பேசுவதும் இல்லை. அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு கடவுள் நிலை. அவன் ஆட எல்லாம் ஆடும் என்ற உண்மையின் விளக்கம் என்ற இவற்றை யெல்லாமே நாம் கண்டு மகிழ்கிறோம். அப்படிக் காணும் போது அவ்வடிவத்தின் ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு ஆழ்ந்த கருத்தின் அடையாளங்களாக விளங்கக் காண்கிறோம். உடுக்கையே படைப்பினைக் குறிக்கிறது. எரியழல் அழிவைக் காட்டுகிறது என்றெல்லாம் பேசுகிறோம்.

இப்படித்தான் சிற்பங்களும், கோயில்களைக் காணும் போதும், பல பல நிலைகளால் படிப்படியாய் உயர்ந்து சென்று கடவுள் நிலையில் ஒன்று பட்டு முடிகின்ற அண்டத்தின் நுட்பத்தையே அங்கே விளக்கமாகக் காண்கிறோம்.

நம்முடைய இலக்கியங்களிலும் இந்த உண்மையே விளங்குகிறது. பலவித செய்யுளுறுப்புகளும் முடிவான ஒன்றை நோக்கி நிற்கின்றன. நம்முடைய உள்ளம் காப்பியப் பேரின்பச் சுவையாக மாறி நிற்பதற்கு இதில் வரும் ஒவ்வொன்றும் துணை செய்கின்றன. 'த்வனியே பாட்டின் உயிர் நிலை' என்று கூறுவதும் இதனாலேயே ஆம்.

வேதப் பாடல்களில் சூரியன் தோன்றலாம். அவனுடைய அழகும் ஆற்றலும் விளங்கலாம். ஆனால் அந்தப் புறக்கோலத்தின் அழகோடு ஒற்றித்து விளங்கும் கடவுள் நிலையும் அங்கே பாவலர் கண்ணுக்குப் படுகிறது. அதனால் சூரியனையே எல்லாமாகப் பாடும் போக்கும் அங்குண்டு.

கடவுள் நிலை

சங்கப் பாடல்களிலும் இந்த நிலையைக் காண்கிறோம். அகப்பாடல்கள் என்று அனைத்திலும் உயிர் நிலையாக விளங்குகின்ற அன்பு நெறியை வளர்க்கும் பாடல்களில் வருபவர்கள் ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாய் இருக்கலாம். ஆனால் புலவன் நமக்கு அங்கே விளக்க முந்துவது மனித தன்மைக்கு உயிர் நிலையாக விளங்குகின்ற அன்பின் விளக்கத்தையே ஆம். அந்த அன்பின் விளக்கத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து காண்கின்ற காட்சியே அவற்றின் சிறப்பு.

இந்த உண்மையைப் பக்தி வெள்ளம் பெருகின காலத்தில் தொண்டர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். 'அன்பே சிவம்' என்பது திருமூலர் துணிவு. இந்தத் துணிவோடு அகப்பாட்டு என்கின்ற பெயர்ப் பொருத்தத்தை நாம் அறிய வேண்டும். அதனை ஆராய்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் தாம் அனுபவித்த கடவுள் இன்பத்தை நமக்கு விளக்க வரும்போது, இத்தகைய அகப்பாடல்களாகவே பாடிக் காட்டுகிறார்கள். ஆண்டவனே காதலனாக, தொண்டர்கள் காதலியாகப் பாடுகின்ற பாட்டையெல்லாம் வெறுங் காதற் கதைகள் என்று கொள்ளுவதற்கில்லை. காதற் கதையையும் தாண்டி விளங்கும் கடவுள் இன்ப அன்பின் காட்சியையே அங்கு எல்லாம் காண்கின்றோம்.

இப்படிக் கடவுள் விளக்கமாக எல்லாம் முடியும்போது நம்முயிர் மட்டுமின்றி நம் உள்ளமும் உடலும் ஆண்டவன் கோயில்களாகச் சிறந்து தோன்றுகின்றன. அப்போது உடலை வெறுக்கின்ற பேச்சோ, இழிக்கின்ற பேச்சோ இல்லை.

3

சிறப்பியல்புகள்

இங்கே 'எண்ணெண்ப் ஏனை

எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு, என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. நம்முடைய கல்வி உள்ளிருக்கும் சில ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையாக அமைகிறது. எழுபிறவியிலும் தொடர்ந்து வளர்ந்து வரும் ஆற்றல்கள் ஒவ்வொருவரின் சிறப்பியல்புகளாக வெளியாகின்றன. நம்முடைய விஞ்ஞானப் போக்குள்ள அறிவு இவ்வாறு கல்வியால் வளர்கின்றது. இவையெல்லாம் அளந்தறிந்து அறிய முயலும் முயற்சியே ஆம். இந்த அளவைக்கெல்லாம் அடிப்படை எண்கள் தாம். எனவே இத்தகைய அறிவின் பெருக்கத்தைத் தான் 'எண்' எண்கிறார் வள்ளுவர் என்று கொள்ளுதல் கூடும். இந்த விஞ்ஞான அடிப்படையின் மேலே எழுப்பப்படுகிற நாகரிகக் கோட்டைகள் எல்லாம் இந்த எண்ணின் விளக்கமே எனலாம்.

ஆனால் இப்படி அளந்தறிய முடியாது நிற்கின்ற ஓர் உளப்பாங்கும் உண்டு. அது முன்னைய கல்வி போல் உள்ளேயிருந்து வெளியே ஈர்க்கப்படுவதல்ல. பலபல கல்விகளாலும், அந்தக் கல்விகளால் உயர ஓங்கும் நாகரிகத்தாலும் உள்ளம் பண்படுகிறது. கல்வி சூழ்நிலை முதலியவற்றின் பயனாக மாறி நிற்கும் மக்கட் கூட்டத்தின் நிலையில் ஒவ்வொருவரும் அப்போது நிலையை ஒட்டிப் பெறும் உள்ளுணர்வு அதன் விளக்கமே பண்பாடு.

கலையின் உயிர்நிலை

அந்தப் பண்பட்ட நிலையே கலையின் உயிர்நிலை. கலைக்கு இரண்டு நிலைகள் உண்டு. கலையைக் கலைஞன் முதலில் தன் உள்ளக்காட்சியாகக் காண்கிறான். அங்கே அது அவனுக்கேயுரிய தற்கிழமைப் பொருளாக விளங்குகிறது. பின்னே ஓவியமாகவும், சிற்பமாகவும், இசையாகவும், பாவாகவும், பிற எல்லாம் அனுபவிக்கக்கூடிய நிலையை அடைகிறது. அப்போது அது பிறிதின் கிழமையாகப் பிறர்க்கும் உரியதாகிறது. அவனுடைமை என்பது நீங்கிப் பொதுவுடைமையாகிறது. இந்த இரண்டு நிலையையும் கவிஞன் செய்தமைக்கும் செய்யுளாம் கலைக்கே உண்டு. அதனாலேயே அதற்குச் 'செய்யுட் கிழமை' என்று பழைய இலக்கணத்தில் பெயருண்டு. இந்தக் கலைப் போக்கைத்தான் எழுத்தென்கிறார் வள்ளுவர் என்று கூற இடம் உண்டு.

'கட்புலனாகக் கடவுளைக் காட்டும் சட்டம்' போன்றது எழுத்தென்று பழைய இலக்கண நூல்கள் கூறுகின்றன. எண்ணால் காண முடியாத கடவுளைக் காட்டும் அடையாளமாக விக்கிரகங்கள் இருக்கின்றன. அது போலக் கண்ணாலே பார்க்க முடியாத ஒலியின் அடையாளமாகக் கண்ணால் பார்க்கும் வரியெழுத்துக்கள் விளக்குகின்றன. இப்படி அடையாளமாக வேறொன்றைக் குறித்து நிற்பவற்றையே எழுத்து என வழங்குவது மரபு.

ஓவியம் முதலிய கலைகளும் மேலே விளக்கியபடி வேறொன்றைக் குறிக்கும் அடையாளங்களாக விளங்குவதால் எழுத்தென்றும் கூறத்தக்கவையே. எழுத்தென்பதற்கு ஓவியம் என்ற பொருளும் உண்டு. இங்கே நாம் விளக்கியபடி பார்த்தால் எண்ணோ நாகரிகத்தில் முடிவதையும், எழுத்தோ பண்பாட்டில் முடிவதையும் காணலாம்.

4

நீதி நூல்கள்

இதுவரையிலும் கலை முதலியன பண்பாட்டின் விளக்கமாக அகப்புற நிலையில் அமைவதைக் கண்டோம், சமூக நிறுவனங்களின் ஒழுக்க நெறியும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். தமிழ் நாட்டில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் இலக்கியமாகவும் சிறந்து விளங்குகின்றன. வள்ளுவர் காலத்திலிருந்து புதிய ஆத்திசூடி பாடிய பாரதி காலம், பாரதிதாசன் காலம் வரையிலும் நீதி நூல்களுக்கு ஓர் ஏற்றம் உண்டு. நம்முடைய குழந்தைகள் முதலில் படிக்கும் செய்யுள் நூல்கள் ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும், வெற்றி வேற்கையும், நல்வழியும், நன்னெறியும், நீதி வெண்பாவும், நீதிநெறி விளக்கமும் ஆம். பழைய இலக்கியங்களைப் படிக்கும்போது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைப் படித்து இன்புறுகிறார்கள்.

திருக்குறள் தமிழரது வேதமாக விளங்குகிறது. இது ஒரு தலைசிறந்த அறநூல். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழி நாலடியாரையும் திருக்குறளையுமே சுட்டிக் காட்டுகிறது. காப்பியம் எழுத வருகின்றவர்கள் எல்லாம் திருக்குறளை இலக்கணமாக வைத்துக் கொண்டு இலக்கியம் எழுதுகிறார்கள்.

கடவுள் வேதத்தைப் பாடினான் என்று சொல்லும்போதெல்லாம் நால்வர்க்கு அறம் உரைத்தான் என்றே பாடுகின்றார்கள். அருளை வற்புறுத்த வந்த அப்பர் பெருமான் கடவுளைத் 'தயா மூலதன்மமே' என்று அறவடிவமாகவே புகழ்கின்றார். இதனால் தமிழ்ப் பண்பாட்டில் அறத்திற்கு இருக்கும் ஏற்றம் நன்கு விளங்கும். அறத்தையே கடவுளாகக் காண்கின்ற காட்சியில் திளைத்துத் தான் திருவள்ளுவர் தம் அறநூலைச் செய்தாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

5

மோட்ச தருமம்

புருஷார்த்தங்களும் பண்பாட்டின் விளக்கம் என்று கண்டோம். அறம், பொருள், இன்பம், வீடு எனப் புருஷார்த்தங்கள் நான்கு. ஆனால் தொல்காப்பியரோ இன்பமும் பொருளும் அறமும் என்று மூன்று புருஷார்த்தங்களையே கூறினார். வள்ளுவரும் இந்த மூன்றையே விளக்குகிறார். இவர்கள் மோட்சத்தைப் புறக்

கணிப்பவர்கள் அல்லர். மோட்ச தர்மத்தையும் அறத்திலேயே அடக்கிக் கூறுபவர்கள். 'யான்' 'எனது' என்கிற தன்னலத்தைத் துறந்து நின்று குடும்பத்தோடும் சமுதாயத்தோடும் பின்னர் உலகோடும், முடிவாக எல்லாம் ஆகிய கடவுளோடும் ஒற்றித்து நிற்கின்ற பெருவாழ்வை வற்புறுத்துகின்றார்கள். ஆகையால் இவர்கள் நோக்கத்தில் மோட்சத்துக்கும் மற்றைய மூன்றுக்கும் முரண்பாடு இல்லை. அறமும் இத்தகைய முழுவாழ்வையே வளர்க்கின்றது. பொருளும் குறைவிலா நிறைவான மக்களையே வளர்க்கின்றது. அகப்பாட்டின் நுட்பத்தை ஆழ்வார்கள் வழியில் நாயன்மார்கள் வழியில் காணும்போது இன்ப வாழ்வே பேரின்ப வாழ்வாக விளங்குகின்ற உண்மை வெளியாகின்றது. எல்லாம் முடிவில் அறம் ஒன்றின் கூறுகளாகவே தமிழர்கள் கண்டார்கள். இந்த உண்மை அவர்கள் கூறும் அறநூற்களை விரிவாக ஆராய்ந்தால் நன்கு புலனாகும்.

6

'உலகெலாம்'

இங்குக் கூறியது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்பு என்று கொள்ளலாம். ஆனால் தமிழர்கள் உலகத்திலிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்ளும் நோக்கத்தில் திரியவில்லை; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நம்பிக்கையில் மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் கூறிய உண்மைகளில் எல்லாம் தாம் வாழ்ந்த வாழ்வின் தமிழ் நுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். இதனாலே இந்திய ஒருமைப்பாட்டிலும் "யாதானும் நாடாமால் ஊராமால்" என்னும் உலக ஒருமைப்பாட்டிலும் எளிதில் நம்பி வாழ்ந்து, "திரைகடல் ஓடி"த் தம் பண்பாட்டை உலகப் பண்பாடாக வளர்த்து வந்தார்கள். இந்த உலக நோக்கினால் அல்லவா, சேக்கிழார் 'உலகெலாம்' என்று முதலிலும் இடையிலும் முடிவிலும் பாடி மகிழ்கின்றார். சம்பந்தரும் "ஞாலம் நின் புகழே மிக வேண்டும்" என்று பாடுகின்றார். "அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று தம் காலத்திற்கும் நம் நாட்டிற்கும் அப்பாற்பட்டவர்கள் கால்களிலும் விழுகின்றார் சுந்தரர்! "உலகெங்கும் மேவிய தேவாலயந்தோறும் மேவியபெருமானே" என்று பாடுகின்றார் அருணகிரிநாதர்; ஆன்மநேய ஒருமைப்பாட்டினால் விளையும் சமரச சன்மார்க்கத்தினைப் பாடுகின்றார் இராமலிங்கம்!

தமிழர் இலக்கியத்தையும், தமிழர் கலைகளையும், தமிழர் வரலாற்றையும் ஆராயும் போது இங்கே நாம் சுருக்கமாக விளக்கிய தமிழர் பண்பாடு விரிந்து பரந்து விளங்குவதைக் காணலாம்.

எமது புதிய வெளியீடுகள்

(1965–ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டப்படி
தயாரிக்கப்பட்டவை.)

HISTORY BOOKS

சரித்திரம்

சிறுவர் வரலாறு

ஆசிரியர் :

P. வீரராகவன், ஆசிரியர் : (ஆரம்பக்கல்வி)

மூன்றும் வகுப்பு : — ரூ. 0 50

ஆசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T.,

சென்னை அப்துல் ஹகீம் இந்து முஸ்லீம்
உயர்நிலைப்பள்ளி, (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்.)

நான்காம் வகுப்பு :	சென்னை	—	ரூ. 0 87
	செங்கற்பட்டு	—	ரூ. 0 87
	வட ஆர்க்காடு	—	ரூ. 0 87
	தென் ஆர்க்காடு	—	ரூ. 0 87
	சேலம்	—	ரூ. 0 87
	கோயமுத்தூர்	—	ரூ. 0 87
	நீலகிரி	—	ரூ. 0 87
	தஞ்சாவூர்	—	ரூ. 0 87
	திருச்சி	—	ரூ. 0 87
	மதுரை	—	ரூ. 0 87

இராமநாதபுரம்	—	ரூ. 0 87
திருநெல்வேலி	—	ரூ. 0 87
ஐந்தாம் வகுப்பு :	—	ரூ. 1 00

மாணவர் வரலாறு

ஆறும் வகுப்பு : — ரூ. 1 25

GEOGRAPHY BOOKS

பூகோளம்

சிறுவர் பூகோளம்

ஆசிரியர் : **P. வீரராகவன்,**

(ஆசிரியர் : ஆரம்பக்கல்வி.)

மூன்றும் வகுப்பு : — ரூ.

(எல்லா ஜில்லாக்களுக்கும்)

ஆசிரியர் : **T. S.** உமாபதி, **M.A., L.T.,**

நான்காம் வகுப்பு :

சென்னை	—	ரூ. 0 62
செங்கற்பட்டு	—	ரூ. 0 62
வட ஆர்க்காடு	—	ரூ. 0 62
தென் ஆர்க்காடு	—	ரூ. 0 62
சேலம்	—	ரூ. 0 62
கோயமுத்தூர்	—	ரூ. 0 62
நீலகிரி	—	ரூ. 0 62

ஐந்தாம் வகுப்பு : — ரூ. 1 00

MATHEMATICS BOOKS

கணக்கு

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர்: **P.** வீரராகவன். (ஆசிரியர் : ஆரம்பக்கல்வி.)

இரண்டாம் வகுப்பு	— ரூ. 0 50
மூன்றாம் வகுப்பு	— ரூ. 0 87
நான்காம் வகுப்பு	— ரூ. 1 00
ஐந்தாம் வகுப்பு	— ரூ. 1 25

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **B. V.** நாகராஜன், **B.A., L.T.,**

முத்தியாலுப்பேட்டை, உயர்நிலைப்பள்ளி, சென்னை-1.

ஆறாம் வகுப்பு	— ரூ. 1 50

SCIENCE BOOKS

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : **P.** வீரராகவன்,

ஆசிரியர் : "ஆரம்பக்கல்வி."

இரண்டாம் வகுப்பு	— ரூ. 0 37
மூன்றாம் வகுப்பு	— ரூ. 0 44

ஆசிரியர் : **M. விவேகானந்தா, B.Sc., L.T., M. Ed.,**

நான்காம் வகுப்பு	— ரூ. 0 75

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : **K. லட்சுமிநாராயணசாமி, B.A., L.T.,**

ஐந்தாம் வகுப்பு	— ரூ. 1 25

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : **K. லட்சுமிநாராயணசாமி, B.A., L.T.,**

ஆறாம் வகுப்பு	— ரூ. 1 25
ஒன்பதாம் வகுப்பு	— ரூ. 1 75

Tamil Non-Detailed Text Books

அறிவுச்சுடர்

ஆசிரியர் : T. S. உமாபதி M.A., L.T.,

ஆறும் வகுப்பு — ரூ. 0 62

புலிகேசி

ஆசிரியர் : இராஜசிவ சாம்பசிவ சர்மா

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 0 87

English Non-Detailed Text

OTHER INDIA SUPPLEMENTARY READER

Author : Mrs. Lucy ARULRAJ

Sixth Standard — Rs. 0 50

TAMIL-DETAILED

ஆசிரியர் : T. S. உமாபதி, M.A., L.T.,

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 1 75

TAMIL GRAMMAR

இலக்கணமும் மொழிப்பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 1 50

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.